# யூனியன் வங்கி கடன் அட்டை - கடன் அட்டை உரிமையாளர் உடன்படிக்கை.

முக்கியம்!

PB 676PQ ஆம் பதிவு இலக்கத்தை கொண்ட கொழும்பு யூனியன் பாங்க் ஒ.்.வ் கொலம்போ பீ.எல்.சி இனால் வெளியிடப்பட்ட கடனட்டையை நீங்கள் பயன்படுத்துவதற்கு முன்னர், தயவு செய்து அட்டை உரிமையாளர் உடன்படிக்கையை கவனமாக படித்துப் பார்க்கவும். அட்டையை ஏற்றுக்கொள்ளல் மற்றும்/அல்லது கையொப்பமிடல் மற்றும்/அல்லது அட்டையைப் பயன்படுத்துவதன் மூலமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்வதுடன், அவற்றுக்கு கட்டுப்படுவதாக கருதப்படும்.

## 1. விளக்கங்கள்

1.1 ‘விண்ணப்பதாரர்’ எனப்படுவது யூனியன் வங்கியின் கடன் அட்டைக்கு விண்ணப்பித்திருக்கும் நபர்(கள்) ஆவர்.

1.2 ‘வங்கி’ அல்லது ‘யூனியன் வங்கி’ என்பது யூனியன் பாங்க் ஒ.்.வ் கொலம்போ பீ.எல்.சி, அதன் வழித்தோன்றல்கள் மற்றும் பதவியினர் ஆகும்.

1.3 ‘அட்டை’ அல்லது ‘கடனட்டை’ எனப்படுவது விண்ணப்பதாரரின் கோரிக்கைக்கமைய, யூனியன் வங்கியினால் வழங்கப்படும் கடன் அட்டையாகும்.

1.4 ‘அட்டை கணக்கு’ எனப்படுவது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப கடன் அட்டையை பயன்படுத்தும் நோக்கத்திற்காக யூனியன் வங்கியினால் பேணப்பட்டு அட்டை உரிமைதாரரின் பெயரில் ஆரம்பிக்கப்படும் அட்டைக் கணக்கு ஆகும்.

1.5 ‘முற்பணம்’ - அட்டை, அட்டை இலக்கம் மற்றும்/அல்லது இரகசிய இலக்கத்தை (PIN) பயன்படுத்தி பணத்தைப் பெற்றுக்கொள்ளும் செயலாகும்.

1.6 ‘முற்பண எல்லை” என்பது வங்கியினால் முற்பணத்திற்கு விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச வரையறை ஆகும்.

1.7 ‘அட்டை உரிமைதாரர்’ - வங்கியினால் அட்டை வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் மற்றும் அத்தகைய அட்டையை வைத்திருக்கும் நபர்.

1.8 ‘கட்டணங்கள்’ அல்லது ‘பரிமாற்றல்’ என்பது இந்த உடன்படிக்கையின் கீழ் இயைபுள்ள கட்டணங்கள் உள்ளடங்கலாக அட்டையினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிமாற்றல் அல்லது கட்டணங்கள் மற்றும் ஏனைய அட்டை உரிமைதாரர்களினால் வங்கிக்கு செலுத்த உடன்பட்டுள்ளதும், பொறுப்புதாரராகவும் ஒப்புக்கொண்ட ஏனைய கட்டணங்கள் ஆகும்.

1.9 ‘கடன் எல்லை’ என்பது கடனட்டை உரிமைதாரருக்கு தனது கடனட்டையை பயன்படுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள எல்லை ஆகும்.

1.10 ‘குறைந்தபட்ச கட்டணம் செலுத்தும் திகதி’ என்பது அறிக்கையில் குறிப்பிடப்படும் கட்டணம் செலுத்தும் திகதியில் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச கொடுப்பனவு தொகையாகும்.

1.11 ‘வாணிபர்’ அல்லது ‘வர்த்தக நிறுவனம்’ என்பது பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுக் கருவியாக அட்டையை ஏற்றுக்கொள்ளும் அல்லது அட்டையை அங்கீகரிக்கும் எந்தவொரு இடத்திலும் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் ஆகும்.

1.12 செலுத்தப்பட வேண்டிய ‘முன்னைய கொடுப்பனவு’ என்பது முன்னைய வங்கிக்கூற்று/வங்கிக்கூற்றுக்களில் நிலுவையிலிருக்கும் மொத்த குறைந்தபட்ச கொடுப்பனவு தொகை(ஏதேனும் இருப்பின்). ஏதேனும் செலுத்தவேண்டிய முந்தைய கொடுப்பனவுகள் இருப்பின், அவை கூற்றில் பிறிதாகக் காட்டப்படுவதுடன், உடனடியாக செலுத்தப்படல் வேண்டும்.

1.13 ‘கொடுப்பனவு திகதி’ என்பது அந்த திகதியில் நிலுவையிலுள்ள மொத்த கொடுப்பனவு கட்டணம் அல்லது ஏனையவை அல்லது வங்கிக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள செலுத்த வேண்டிய குறைந்தபட்ச கொடுப்பனவு தொடர்பில் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதி ஆகும்.

1.14 ‘PIN' என்பது யூனியன் வங்கியினால் அட்டை உரிமையாளருக்கு ஒதுக்கப்படும் தனிப்பட்ட அடையாளப்படுத்தல் இலக்கம் அல்லது அட்டை தொடர்பாக காலத்திற்கு காலம் அட்டை உரிமையாளரினால் தெரிவு செய்யப்படும் இலக்கமாகும்.

1.15 கணக்கிற்கான திகதி - அட்டைக் கணக்கிற்கு செயலாக்கப்பட்டுள்ள மற்றும் பரிமாற்றப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற திகதி ஆகும்.

1.16 ‘பிரதான அட்டை உரிமையாளர்’ என்பது வங்கியானது எவருடைய பெயரில் அட்டைக் கணக்கினை திறந்துள்ளது அல்லது திறக்க தீர்மானித்துள்ள நபராவார்.

1.17 ‘இணை அட்டை உரிமையாளர்’ என்பது பிரதான அட்டை உரிமையாளர் தவிர்ந்து, பிரதான அட்டை உரிமையாளரினால் அட்டை வழங்குமாறு கோரப்பட்டுள்ள மற்றும் பிரதான அட்டை உரிமையாளரின் கணக்கிற்கு கட்டணங்களை விதிக்கும் தனிநபர் ஆகும்.

1.18 ‘அறிக்கை’ என்பது அட்டை கணக்குடன் தொடர்புடைய பிரதான அட்டை உரிமையாளர் மற்றும் எந்தவொரு இணை அட்டை உரிமையாளரினதும் அறிக்கை திகதி தொடர்பான நிதிக் கடப்பாடுகளை குறிப்பிட்டு யூனியன் வங்கியினால் அனுப்பப்படும் கணக்கின் மாதாந்த கூற்று(கள்) அல்லது கணக்குகளின் ஏனைய காலாந்தர கூற்றுக்கள்.

1.19 ‘மொத்த நிலுவை’ என்பது வங்கியின் பதிவுகளுக்கமைய, வங்கிக்கு செலுத்தவேண்டிய அட்டை கணக்கு தொடர்பான நிலுவையிலுள்ள மொத்த பற்று நிலுவை(அட்டை கணக்கிற்கு செலுத்த வேண்டிய அனைத்து கட்டணங்களும் உள்ளடங்கலாக).

## 2 விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் தொடர்புடையவை

2.1 ‘விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்’ எனப்படுவது இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் மற்றும்/அல்லது திருத்தத்தின் படி யூனியன் வங்கியினால் காலத்திற்கு காலம் நிர்ணயிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள். முரண்பாடான கருத்துக்கள் தோன்றினாலொழிய, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில்:-

I. ‘திருத்தம்’ என்பதில் சேர்க்கைகள், நவீனமயப்படுத்தல், மாற்றீடு, மீளுருவாக்க சட்டம் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. மற்றும் ‘திருத்தப்பட்டது’ என்பது அதற்கிணங்க பொருள் கொள்ளப்படல் வேண்டும், ‘அங்கீகாரமளிப்பு’ அல்லது ‘அங்கீகாரம்’ இனுள் அங்கீகாரமளிப்பு, ஒப்புதல், சரிபார்ப்பு, அங்கீகாரம், அனுமதி, தீர்மானம், அனுமதி பத்திரம், விலக்கு, கோப்பிலிடுதல் மற்றும் பதிவு ஆகியன அடங்கும்.

‘சட்டம்’ என்பதில் விண்ணப்பப்படிவம் கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து அல்லது அதன் பின்னர் காலத்திற்கு காலம் ஒருவர் திருத்தியமைத்ததிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் எந்தவொரு

அரசியலமைப்பு, சட்டம், ஆட்சி, விதிமுறை, கட்டளை, தீர்ப்பு, ஒழுங்கு, ஆணை அல்லது ஏதேனும் பிரசுரிக்கப்பட்ட, வழிகாட்டப்பட்ட, வழிகாட்டல், தேவைப்பாடுகள் அல்லது சட்டத்தின் மூலமான அரச கட்டுப்பாடுகள், நடைமுறையிலுள்ள ஏதேனும் ஒருங்கிணைப்புகள், ஏதேனும் நீதி அதிகாரம் ஆகியன உள்ளடங்குகின்றன.

II. ஒருமையாகவோ அல்லது பன்மையாகவோ கருத முடியும். (மற்றும் நேர்மாறாக)

III. இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் தலைப்புக்கள் ஆகியன குறிப்பு வசதிக்காக மட்டுமே உள்ளிணைக்கப்பட்டுள்ளதுடன், விதிகள் மற்றும் நிபந்தனைகளை புரிந்து கொள்ளுதல் மற்றும் புரிந்துகொள்வதில் புறக்கணிக்கப்படல் வேண்டும்˙

IV. ‘‘உள்ளடக்கம்’’ அல்லது ‘‘உள்ளடக்கப்படுகிறது’’ ஆகிய வார்த்தைகளுக்கான குறிப்பு எவ்வித கட்டுப்பாடுமின்றி புரிந்து கொள்ளப்படல் வேண்டும்˙

V. பாலினம் என்பது பெண், ஆண் மற்றும் இருபாலினத்தவரை குறிக்கும்.

2.2 அட்டை விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடல், மற்றும்/அல்லது அட்டை மீது கையொப்பமிடல், மற்றும்/அல்லது அட்டையினை பயன்படுத்துவதன் மூலமாக இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கான ஆதாரத்தை அட்டை உரிமைதாரர் வழங்குவதாக கருதப்படும்.

2.3 பொருத்தமான அனைத்து சட்டங்கள், இலங்கையின் பரிமாற்றல் கட்டுப்பாட்டு விதிமுறைகள் மற்றும் பொருத்தமான மற்றும் காலத்திற்கு காலம் திருத்தியமைக்கப்படும் ஏதேனும் கொள்கைகள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்கியதாக அட்டையின் பயன்பாடு கட்டாயம் அமைதல் வேண்டும்.

2.4 ஏதேனும் நிகழ்வு, சூழ்நிலை, மாற்றம், காரணி, தகவல், ஆவணம், அங்கீகாரமளிப்பு, செயல், சட்டம், விடுப்பு, நஷ்டாடுகள், மீறல், தோல்வி அல்லது ஏனையவற்றை உள்ளடக்கிய ஏதேனும் விடயம் தொடர்பில் யூனியன் வங்கி மற்றும் அட்டை உரிமையாளருக்கிடையிலான ஏதேனும் கருத்து வேறுபாடு அல்லது சர்ச்சை எழும் சந்தர்ப்பத்தில் மேற்கூறிய ஏதேனும் நிகழ்வின் விடயத்துக்கமைய யூனியன் வங்கியின் கருத்தானது இறுதியானதாக இருப்பதுடன், அட்டை உரிமையாளர் மீது பிணைக்கப்படும்.

## 3. அட்டை

3.1 அட்டையானது யூனியன் வங்கியின் சொத்தாகும் மற்றும் வங்கியினால் கோரப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்தில் அட்டை உரிமையாளரினால் உடனடியாக வங்கிக்கு திரும்ப அளிக்கப்படல் வேண்டும்.

3.2 எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் வங்கியின் ஏக விருப்பத்துடன் அட்டை வழங்குவதை குறைப்பது தேவையெனக் கருதப்படுமிடத்து, கடன் பணியக அறிக்கை(CRIB) மற்றும் அத்தகைய ஏனைய அறிக்கைகள் ஆகியவற்றைப் பெற்று விண்ணப்பதாரரின் கடன் தாங்குதிறனை உறுதிப்படுத்துவதற்கான உரிமையை யூனியன் வங்கி கொண்டிருக்கிறது.

3.3 கடனட்டை உரிமையாளரிடமிருந்து கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில், பிரதான அட்டை உரிமையாளரின் பெயரில் சேமிப்பு கணக்கொன்றினை உருவாக்குவதற்கான உரிமையை யூனியன் வங்கி கொண்டுள்ளது. அட்டை உரிமையாளரின் வேறெந்தவொரு பயன்பாட்டிற்கும் இக் கணக்கு அனுமதிக்காது.

3.4 இந்த அட்டையை கைமாற்ற முடியாது மற்றும் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் விதிமுறைகள் மற்றும் யூனியன் வங்கியினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் ஏனைய மேலதிக கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கிணங்கியதாக அதன் பயன்பாடு அமையும். அட்டையின் முகப்பில் அச்சிடப்பட்டிருக்கும் காலாவதித் திகதி வரை அட்டை செல்லுபடியாகும். வங்கியானது இந்த உடன்படிக்கையின் கீழ் நடைமுறையிலிருக்கும் அட்டை உரிமையாளரின் கடப்பாடுகளை பாதிக்காத வகையில், அதன் ஏக விருப்பத்துடன் முன்னறிவித்தலின்றியோ அல்லது காரணமின்றியோ எந்தவொரு நேரத்திலும் அட்டையை முழுமையாக அல்லது குறித்த வசதிகளுக்கு பயன்படுத்தல் அல்லது எந்தவொரு அட்டையினதும் புதுப்பித்தல் அல்லது மாற்றீடு செய்தல் மற்றும் மீள் வெளியீட்டிற்கான மறுப்பு ஆகிய அட்டை மற்றும் அட்டை உரிமையாளரின் உரிமையைத் திரும்பப் பெறலாம். அட்டை உரிமையாளர் தாமாகவே அட்டையினை மீளக் கையளிக்கும் சந்தர்ப்பத்தில், இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டை உரிமைதாரரின் அனைத்து கடப்பாடுகளும் அவரது திருப்தி மற்றும் வங்கியின் திருப்தியுடனும் மேற்கொள்ளப்படும் வரை இந்த உடன்படிக்கையின் கீழ் கடப்பாடுகள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

3.5 பற்றுச்சீட்டினை பெற்றவுடனேயே அட்டையின் பின்புறத்தில் அட்டை உரிமையாளர் கையொப்பமிட வேண்டும் என்பதுடன், வேறெந்த நபருக்கும் அட்டையினை பயன்படுத்துவதற்கான அனுமதியை வழங்கலாகாது மற்றும் அனைத்து நேரங்களிலும் அட்டையினை பாதுகாக்க வேண்டும் மற்றும் அட்டை உரிமையாளரின் தனிப்பட்ட கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருத்தல் வேண்டும்.

## 4. இணை அட்டை

4.1 வங்கியினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான பிரதான அட்டை உரிமையாளர் மற்றும் இணை அட்டை உரிமையாளர்(கள்) இன் கோரிக்கைக்கமைய, வங்கியானது அதன் முழுமையான விருப்பத்துடன் இணை அட்டை வசதியை வழங்கலாம். கணக்கு தொடர்பான எந்தவொரு இணை அட்டை(கள்) உரிமையாளர்(கள்) மற்றும் அட்டை உரிமையாளர் ஆகியோர் தமது வழங்கலானது, அட்டை(கள்) இனை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான கட்டணங்களுக்கும் கூட்டாகவும் மற்றும் கடுமையாகவும் பொறுப்பை கொண்டிருப்பதாக உறுதியளிக்கின்றனர். பிரதான அட்டை உரிமையாளரின் தொடர்ச்சியின் மீது இணை அட்டையின் வசதி தங்கியுள்ளது.

4.2 பிரதான மற்றும் இணை அட்டை உரிமையாளருக்கான வருடாந்த கட்டண கொடுப்பனவுகள் ஆகியன தத்தமது அட்டை திறக்கப்பட்ட திகதிகளின் அந்தந்த ஆண்டுகளுக்கேற்ப அறவிடப்படும்.

4.3 பிரதான அட்டை உரிமையாளர் மூலம் ஒவ்வொரு இணை அட்டை உரிமையாளருக்குமான எல்லையைக் குறைப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்கினாலொழிய, பிரதான மற்றும் அனைத்து இணை அட்டை உரிமையாளர்களும் ஒரே கடன் வரம்பினையே கொண்டிருப்பர்.

4.4 பிரதான அட்டை உரிமையாளர் அல்லது இணை அட்டை உரிமையாளர்(கள்) இற்கு அனுப்பப்படும் அல்லது பெறப்படும் அனைத்து விதமான தொடர்பாடல்களும் இரு தரப்பினருக்கும் அனுப்பப்படும் அல்லது பெறப்படும் தகவல்களாக கருதப்படும்.

4.5 பிரதான அட்டை உரிமையாளரின் அல்லது ஏனைய இணை அட்டை உரிமையாளர்களின் ஒப்புதலைப் பெறாது, தொடர்புடைய கணக்கு தொடர்பான தகவல்களை இணை அட்டை உரிமையாளர்கள் அணுகுவதற்கான அனுமதியை பிரதான அட்டை உரிமையாளர் உடன்படுவார்.

வங்கியின் விருப்பதுடன் எந்தவொரு இணை அட்டை உரிமையாளர்களுக்கும் கணக்கு தொடர்பான தகவல்களை வழங்குவதற்கான ஒப்புதலை பிரதான அட்டை உரிமையாளர் வங்கிக்கு அளிப்பார். இருந்தபோதிலும், அவ்வாறு செய்வதற்கான கடப்பாட்டினை வங்கி கொண்டில்லை.

4.6 பிரதான அட்டை உரிமையாளரின் எழுத்து மூலமான கோரிக்கை மூலமாக மாத்திரமே இணை அட்டைக் கணக்கினை முடிவுறுத்த முடியும்.

## 5. அட்டை விநியோகம்

இந்த அட்டை(கள்) அட்டை உரிமையாளர் மற்றும் இணை அட்டை உரிமையாளர்(கள்) இற்கு ஒப்படைப்பு சேவை மூலமாக அனுப்பப்படலாம். பிரதான அட்டை உரிமையாளர் மற்றும் எந்தவொரு இணை அட்டை உரிமையாளர்(கள்) தனது அட்டை பெற்றுக்கொண்ட பின்னர் அவர்/அவள் தனது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டுவதுடன் அட்டையினை பெற்றுக்கொண்டதாக உறுதிப்படுத்த வேண்டும். அட்டை உரிமையாளர்∴இணை அட்டை உரிமையாளர் ஆகியோர் அவர்∴அவளது விருப்பத்துடன் அவர்/அவளது சார்பாக மூன்றாம் தரப்பினர் அட்டையினை பெற்றுக்கொள்வதற்கான அனுமதியை வழங்குவதுடன், அட்டை உரிமையாளர்/இணை அட்டை உரிமையாளர்(கள்) அல்லது அவர்/அவளது சார்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட நபர் மூலமாக பெற்றுக்கொள்ளப்பட்டது முதல் அட்டை(கள்) மூலமாக மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவு கட்டணங்களுக்குமான பொறுப்பினைக் கொண்டிருப்பர். வங்கி அல்லது அட்டை உரிமையாளரை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதிநிதி மூலம் முடிவு செய்யப்பட்ட மூன்றாம் தரப்பினரிடம் வங்கியானது அதன் விருப்பதுடன் அட்டையினைக் கையளிக்கலாம். அட்டை கையளிக்கப்பட்ட தினத்திலிருந்து அட்டை தொடர்பான அனைத்து கட்டணங்களுக்கும் அட்டை உரிமையாளர் பொறுப்பு ஆகும்.

## 6. அட்டையின் பயன்பாடு

6.1 வீசா அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும் வர்த்தக நிறுவனங்கள், இணைய வர்த்தகங்கள் மற்றும் ATM இயந்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய உலகளாவிய ரீதியில் இவ் அட்டை செல்லுபடியாகும். சேவை நிறுவனங்களில் அட்டையினைப் பயன்படுத்திய பின்னர் கையொப்பமிடும் கட்டணச் சீட்டின் பிரதியினை அட்டை உரிமையாளர் கட்டாயமாகப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். பொதுவாக வங்கியானது, ஏனைய கொடுப்பனவு சீட்டின் பிரதிகளை அட்டை உரிமையாளருக்கு வழங்காது. இருந்தபோதிலும், வங்கியின் ஏக விருப்பத்துடன், வங்கியினால் நிர்ணயிக்கப்படும் மேலதிக கட்டணக் கொடுப்பனவிற்கேற்ப பிரதிகளை வழங்க முடியும். அஞ்சல் அல்லது தொலைபேசிக் கட்டளை கொள்வனவுகள் அல்லது இணையம் மூலமான பரிமாற்றல்கள் ஆகியவற்றை செயல்படுத்துவதற்கான வசதியை அவருக்கு/அவளுக்கு வங்கி அனுமதி வழங்குவதை அட்டை உரிமையாளர் ஏற்றுக்கொள்வதுடன், அத்தகைய சந்தர்ப்பங்களில் அட்டை பயன்பாட்டின் போது கட்டணச்சீட்டில் அட்டை உரிமையாளரின் கையொப்பம் இடப்படாது. இதற்கமைய, ஏதேனும் காரணங்களுக்காக கொள்வனவு அல்லது கட்டணம் தொடர்பாக எழும் நம்பகத்தன்மை மற்றும் செல்லுபடியாகும் தன்மை தொடர்பில் ஏதேனும் சர்ச்சைகள் இடம்பெற்ற போதிலும் மொத்த நிலுவையை அட்டை உரிமையாளர் செலுத்துவதற்கு உடன்படுவார். இத்தகைய சர்ச்சைகள் தொடர்பான விடயம் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் அட்டை உரிமையாளர் மற்றும் குறித்த வர்த்தக நிறுவனம் மூலமாக செலுத்தப்படும்.

6.2 குறித்த அட்டையானது உண்மையாகவும், தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தலாம் மற்றும் அதன் பயன்பாடானது வர்த்தக நிறுவனங்களுக்கான பொருட்கள் கொள்வனவு.'.இறக்குமதி அல்லது மூலதன பரிமாற்றல்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக அனுமதிக்கப்படவில்லை. இந்த அட்டையினை எந்தவொரு சட்ட விரோதமான அல்லது சட்டத்திற்கு முரணான நோக்கத்திற்காக பயன்படுத்தலாகாது. அட்டை கணக்கின் செலுத்த வேண்டிய தொகை அதிகரித்திருத்தல் அல்லது சந்தேகத்துக்கிடமான நடவடிக்கையாக கருதப்படுமிடத்து, ஏதேனும் அல்லது அனைத்து அட்டை பரிமாற்றல்களையும் முடக்குவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

6.3 சர்வதேச ரீதியில் அட்டை செல்லுபடியாகும் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்களுக்கமைய அதன் பயன்பாடு அதிகரிக்குமாயின் அட்டை உரிமையாளர் மத்திய வங்கியிடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்தோடு இலங்கை மத்திய வங்கியின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

6.4 லொத்தர் சீட்டுக்களை கொள்வனவு செய்தல், சூதாட்டப் பரிமாற்றல்கள், வெளிநாட்டு வர்த்தக பரிமாற்றல் மற்றும் தடை செய்யப்பட்ட பாலியல் விடயங்கள் தொடர்பான இணையம் அல்லது ஏனையவற்றில் அட்டையினை பயன்படுத்தக்கூடாது.

6.5 வங்கியினால் வழங்கப்படும் அட்டையானது தொடர்பற்ற அட்டை வாசிப்பாளர்கள்/விற்பனை மையங்களில் அட்டையை உள்ளிட்டு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான அம்சத்தை கொண்டுள்ளது என்பதை அட்டை உரிமையாளர் ஒப்புக்கொள்வதுடன், இத்தகைய பரிமாற்றல்கள் ”தொடர்பற்ற பரிவர்த்தனைகள்” அல்லது ”Paywave பரிவர்த்தனைகள்” என அறியப்படும்.

6.6 வங்கியினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கும் தொகையினை விட தொடர்பற்ற பரிமாற்றல்கள் அதிகரிக்கக்கூடாது, இத்தகைய பரிமாற்றல்களை ஏற்றுக்கொள்ளும் வர்த்தக நிலையங்களில் செயல்படுத்த முடியும் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் அவசியமின்றி தொடர்பற்ற பரிமாற்றல் தொகையுடன், அட்டை கணக்கு பற்று வைக்கப்படும்:

a) காந்த பட்டை இயந்திரத்தில் அட்டையினை ஸ்வைப் செய்தல் அல்லது

b) சிப் முனையம் மூலமாக அட்டையின் சிப் வாசிக்கப்படுதல் அல்லது

c) பரிமாற்றல்களை உறுதிப்படுத்துவதற்கான அட்டை உரிமையாளரின் கையொப்பம் அல்லது பரிமாற்றலை உறுதிப்படுத்துவதற்கான அட்டை உரிமையாளரின் தனிப்பட்ட இரகசிய இலக்கம்(PIN)

6.7 வெளிநாட்டு பரிமாற்றல்களை மேற்கொள்ளும் போது ஒவ்வொரு சந்தைக்கும் ஏற்ப தொடர்பற்ற பரிமாற்றல் எல்லை வேறுபடும்.

6.8 வெளிநாடுகளுக்கு பிரயாணிக்கும் போது நலன் தரும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தன்னியக்க இயந்திரங்கள்(ATM) மற்றும் வர்த்தக நிலையங்களில் வழங்கப்படும் சேவையாக பணப் பரிமாற்றல்கள்(DCC) அமைந்துள்ளன. விற்பனை மையத்தில் வெளிநாட்டு நாணய பரிமாற்றல்களை அட்டை கணக்கின்(இலங்கை ரூபாய்) நாணயமாக DCC மாற்றமடையச் செய்கிறது. DCC ஊடாக அட்டை உரிமையாளர் வெளிநாட்டு பரிமாற்றல்களை இலங்கை ரூபாயாக மாற்றக்கோரும் பட்சத்தில் குறித்த வர்த்தக நிலையங்கள் அல்லது தன்னியக்க இயந்திரங்களினால் தீர்மானிக்கப்படும் பரிமாற்றல் செயல்பாடு மற்றும் பரிமாற்றல் விகிதங்கள் ஏற்று அவர்.'.அவள் ஒப்புதல் அளிக்கப்படும்.

6.9 ”வீசா மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளது” என அறியப்படும் 3D-பாதுகாப்பு தொழில்நுட்பத்தை அட்டையானது தன்னியக்கமாக இயக்குவதை அட்டை உரிமையாளர் புரிந்து ஏற்றுக்கொள்வதுடன், அதனூடாக இணையத்தில் மேற்கொள்ளப்படும் ஒருசில பரிமாற்றல்களின் போது அவற்றை பூர்த்தி செய்வதற்கு “ஒரே தடவைக்கான கடவுச்சொல்“ (OTP) ஊடாக பரிமாற்றல் அத்தாட்சிப்படுத்தல் தேவைப்படுகிறது. அத்தாட்சிப்படுத்துதல் தோல்வி காரணமாக பரிமாற்றல்கள் முழுமை பெறாத சந்தர்ப்பத்தில் வர்த்தக நிறுவனமோ அல்லது வங்கியோ எவ்வித பொறுப்பையும் ஏற்காது. அட்டை உரிமையாளரினால் பெறப்படும் OTP ஆனது எந்தவொரு மூன்றாம் தரப்பினருடனும் பகிர்ந்து கொள்ளலாகாது மற்றும் PIN இலக்கத்திற்கு இணையாக OTP பாதுகாக்கப்படல் வேண்டும்.

6.10 அட்டை உரிமையாளருக்கு வங்கியினால் குறிப்பிடப்படும் கடன் எல்லைக்குள் அட்டை பயன்படுத்தலாம் மற்றும் அதன் முகப்பில் பொறிக்கப்பட்டிருக்கும் மாதத்தின் இறுதித்திகதி பின்னர் பயன்படுத்த முடியாது.

6.11 எந்தவொரு வர்த்தக நிறுவனத்தினாலும் அட்டை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதற்கான எவ்வித வாக்குறுதியையும் வங்கி வழங்காது என்பதுடன், எந்தவொரு வர்த்தக நிறுவனத்தினாலும் அட்டை மறுக்கப்பட்டால் வங்கி எவ்வித பொறுப்பையும் ஏற்காது.

6.12 வங்கியினால் பிரிக்கப்பட்டுள்ளதன் படி சாதாரண அட்டை உரிமையாளரினால் மேற்கொள்ளப்படும் பொதுவான பரிமாற்றல்கள் ஒத்திருக்காத அல்லது சந்தேகத்துக்குரிய பரிமாற்றல்களை நிறுத்தி பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அட்டையைப் பயன்படுத்தி இத்தகைய பரிமாற்றல்களை உறுதிப்படுத்துவதற்காக பிரதான அட்டை உரிமையாளரையோ அல்லது இணை அட்டை உரிமையாளரையோ காலத்திற்கு காலம் வங்கி தொடர்புகொள்ளும்.

6.13 விநியோகத்தில் இடம்பெறும் தாமதம், விநியோகிக்காமை மற்றும் அட்டை உரிமையாளரினால் அஞ்சல் கட்டளை மூலமாக மேற்கொள்ளப்படும் குறைபாடுள்ள பொருட்களுக்கான பற்றுச்சீட்டு அல்லது பற்றுச்சீட்டு அல்லாத பொருட்கள் உள்ளடங்கலாக வர்த்தக நிறுவனங்களில் அட்டை உரிமையாளர் மூலம் கொள்வனவு செய்யப்படும் உறுதிகள் அல்லது சேவைகள், வர்த்தகங்கள் ஆகியவற்றுக்கான எவ்வித பொறுப்பையும் வங்கி கொண்டிருக்காது. அட்டை உரிமையாளர் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு அல்லது சேவைகளை பெறுவதற்கான சிறந்த வசதியாக அட்டை வசதி கருதப்படும் என்பதையும், பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான தரம், அளவு, விநியோகம் அல்லது இதர விடயங்கள் குறித்த எவ்வித பிரதிநிதித்துவத்தையோ அல்லது உத்தரவாதத்தையோ வங்கி கொண்டிருக்காது என்பதையும் மற்றும் எந்தவொரு சர்ச்சை தொடர்பிலும் சேவை நிறுவனத்துடன் இணைந்து அட்டை உரிமையாளர் கட்டாயம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். ஏற்கனவே உள்ள சர்ச்சைகள் அட்டை உரிமையாளரை எவ்விதத்திலும் விடுவிக்காது என்பதுடன், நிலுவையிலுள்ள சர்ச்சைகள் அல்லது ஏதேனும் உரிமைக்கோரல் தொடர்பில் வங்கிக்கு எவ்வித மறுப்புமின்றி குறித்த கட்டணங்களை செலுத்துவதற்கு அவர்/அவள் உடன்படுவார்.

6.14 வங்கி அல்லது அட்டை உரிமையாளரினால் அட்டை முடக்கப்படுதல் அல்லது அட்டை காணாமல் போதல்/முறைகேடாகப் பயன்படுத்தல் அல்லது களவுபோதல் போன்ற சம்பவங்களின் அடிப்படையில் அட்டை உரிமையாளரின் அட்டையைப் பயன்படுத்துவதற்கான உரிமை தீர்மானிக்கப்படுகிறது.

6.15 அட்டை உரிமையாளரினால் எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்கும் காலம் வரை வங்கியின் ஏக விருப்பத்துடன் அட்டைகள் புதுப்பித்தல் மற்றும்/அல்லது மாற்றீடுகள் ஆகியவற்றை ஒவ்வொரு அட்டை உரிமையாளருக்கும் வழங்குவதற்கான அவர்/அவள் நிலையியற் கோரிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதை அட்டை உரிமையாளர் ஒப்புக்கொள்கிறார். காலாவதி, காணாமல் போதல்,

சேதமடைதல் அல்லது அட்டை களவு போதல் ஆகியவற்றின் போது அட்டை வசதிகளை புதுப்பிப்பதற்கான ஏக உரிமையை வங்கி கொண்டுள்ளது. புதுப்பிக்காத சந்தர்ப்பத்தில், எவ்வித மறுப்போ அல்லது தாமதமோ இன்றி நிலுவைத்தொகையினை வங்கிக்கு அட்டை உரிமையாளர் செலுத்துதல் வேண்டும்.

6.16 அட்டை உரிமையாளர் ஒருவர் வெளிநாட்டிற்கு புலம்பெயர்தல் மற்றும்/அல்லது நிரந்தர வேலைக்காகச் செல்லுதல் அல்லது அத்தகையவர் பரிவர்த்தனை கட்டுப்பாட்டு விதிமுறைகளின் வரையறைகளின் படி "குடியுரிமை அல்லாதவர்" ஆக கருதப்படுவதால் எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டுவதுடன், செலுத்தி முடிக்க வேண்டிய அனைத்து கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும். அத்தோடு பிரதான அட்டை மற்றும் ஏனைய இணை அட்டைகளை ஒப்படைக்க வேண்டும்.

6.17 பெயர் அல்லது முகவரியில் நிகழும் ஏதேனும் மாற்றங்களை எழுத்து மூலம் வங்கிக்கு அட்டை உரிமையாளர் அறிவித்தல் வேண்டும்.

6.18 கடன் அட்டை திட்டத்தை முடிவுறுத்தல் அல்லது கடனட்டையை புதுப்பிக்கும் போது யூனியன் வங்கி அதன் ஏக விருப்பத்துடன் அட்டை உரிமையாளா் ஏற்கனவே கொண்டிருக்கும் அட்டையை விட வேறு அட்டை வகையினை வழங்குவதற்கான உரிமையைக் கொண்டுள்ளது. எந்தவொரு இடத்திலும் எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு கடனட்டை மீதான கடன் எல்லைகள் மற்றும் காசு எல்லை ஆகியன யூனியன் பாங்க் ஒ∴வ் கொலம்போ பீஎல்சியின் ஏக விருப்பத்தின் படி இடம்பெறும்.

6.19 அட்டை மற்றும் யூனியன் வங்கி ஆகியவற்றுடனான அனைத்து கொடுக்கல் வாங்கல்களிலும் அட்டை உரிமையாளர் சிறந்த நம்பிக்கையில் செயல்படுவார்.

## 7. தனிப்பட்ட இரகசிய இலக்கம்(PIN)

தனிப்பட்ட இரகசிய இலக்கமானது(PIN) வங்கியின் விருப்பத்துடன் பிரதான அட்டை உரிமையாளர்/இணை உரிமையாளருக்கு(கள்) வங்கி வைத்து அளிக்கப்படும் அல்லது பதிவு செய்யப்பட்ட அட்டை/சாதாரண தபால் அல்லது ஒப்படைப்பு சேவை மூலமாக அனுப்பி வைக்கப்படலாம்.

குறித்த அட்டையினைப் பெற்றுக்கொண்ட பின்னர், அவ்வட்டையானது அட்டை உரிமையாளரின் சொத்தாக கருதப்படும் மற்றும் PIN இலக்கம் பாதுகாக்கப்பட்டுள்ளதை உறுதி செய்வதற்கான அனைத்து முன்னெச்சரிக்கைகளையும் அட்டை உரிமையாளர் முன்னெடுக்க வேண்டும் மற்றும் அதில் எவ்வகையிலும் சமரசம் செய்யலாகாது. இந்த PIN ஊடாக பாதுகாப்பான கட்டமைப்பில் கொடுக்கல் வாங்கல் இடம்பெறுவது உறுதி செய்யப்படுவதுடன், அட்டையின் பின்வரும் சேவைகளை பூர்த்தி செய்ய அவசியமானதாக உள்ளது,

7.1 உள்நாட்டில் அல்லது சர்வதேச ரீதியில் காணப்படும் எந்தவொரு VISA ATM (தன்னியக்க டெலர் இயந்திரம்) முற்பணப் பெறுகைகள் அல்லது மீதி நிலுவைகளை அறிந்து கொள்வது.

7.2 தெரிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்களில் குறிப்பாக வெளிநாடுகளில் மேற்கொள்ளும் POS (Point of Sale) கொடுக்கல் வாங்கல்களின் போது PIN இலக்கம் கோரப்படும்.

## 08. வதியாதோர் மற்றும் வெளிநாட்டு குடியுரிமையாளர்களுக்கான அட்டை வழங்கல்

8.1 வெளிநாட்டு தேசிய அட்டை உரிமையாளர் விண்ணப்பிக்க முடிவதுடன், அவர்/அவள் இலங்கையில் வசிப்பவராக இருப்பின் அட்டையினைப் பயன்படுத்த முடியும். அவர்/அவள் நிரந்தரமான நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரும், மற்றும்/அல்லது அவர்/அவளது வதிவிட நுழைவுச்சான்று முதிர்ச்சியடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னரும் எழுத்து மூலமாக வங்கிக்கு வெளிநாட்டு தேசிய அட்டை உரிமையாளர் அறிவிக்க வேண்டும். மேலே கூறப்பட்ட நிகழ்வுகளில் ஒன்று இடம்பெறுவதற்கு முன்னர் அவர்/அவள் செலுத்த வேண்டிய கட்டணங்களை முழுமையாக செலுத்த வேண்டுவதுடன், அட்டை(களை) மீள ஒப்படைத்தல் வேண்டும்.

8.2 இத்தகைய கணக்கினை பயன்படுத்தி வெளிநாட்டு நாணயத்தில் கடனட்டை நிலுவைகளை செலுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்தல் மற்றும் வங்கிக்கு திருப்திமிக்கதாக குடியுரிமையற்ற வெளிநாட்டு நாணயக் கணக்கினை அவர்/அவள் முறையாக செயல்படுத்தல் மற்றும் பேணியிருத்தல் எனும் நிபந்தனையில் கீழ் மாத்திரமே குடியுரிமையற்றோருக்கு அட்டை வழங்கப்படும்.

## 09. கடன் எல்லை

9.1 அட்டை மற்றும் காலாந்தர அறிக்கைகளின் கடித உறையில் அட்டை கணக்கிற்கான கடன் எல்லையை வங்கி குறிப்பிட்டிருக்கும். கடன் எல்லையை வங்கி நிர்ணயிப்பதுடன், அவ்வப்போது அதிகரிப்பு மற்றும் குறைத்தல் ஆகியவற்றை மேற்கொள்வதுடன், காலத்திற்கு காலம் அட்டை உரிமையாளருக்கு தெரியப்படுத்தப்படும். கடன் எல்லையை குறைத்தல் அல்லது அதிகரித்தல் காரணமாக அட்டை உரிமையாளருக்கு ஏற்படும் எந்தவொரு இழப்பு அல்லது சேதம் குறித்த எந்தவொரு விளைவுகளுக்கும் வங்கி பொறுப்பு ஏற்காது.

9.2 அட்டை உரிமையாளரின் கடன் எல்லையை நிரந்தரமாக அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் குறுந்தகவல், கடிதம் அல்லது தொலைபேசி மூலமாகவோ அட்டை உரிமையாளருக்கு வங்கி அறிவிக்கும். வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் அட்டை உரிமையாளர் உடன்படாத சந்தர்ப்பத்தில் உடனடியாக வங்கிக்கு அதனை அறியத்தருவது அவர்/அவளது கடமையாகும். உடன்பாடின்மை தொடர்பில் அறியத்தரும் வரை, அவர்/அவளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள குறித்த கடன் எல்லை அதிகரிப்பை அட்டை உரிமையாளர் ஒப்புக்கொண்டதாக புரிந்து கொள்ளப்படும்.

9.3 தற்போதைய நிலுவைத்தொகையானது கடன் எல்லையை விட அதிகரிக்குமாயின், அட்டை உரிமையாளர் உடனடியாக மேலதிக கட்டணக் கொடுப்பனவை செலுத்துதல் வேண்டும். காலத்திற்கு காலம் கடன் எல்லை அதிகரிப்புக்கு விதிக்கப்படும் எல்லை அதிகரிப்பு தொகைக்கேற்ப, மேலதிக எல்லைக் கட்டணம் அட்டை கணக்கிற்கு விதிக்கப்படும்.

9.4 அட்டை உரிமையாளர் ஒருவர் முற்பணத்தினை முற்பண வரையறை வரை பெற்றுக்கொள்ள முடியும். தற்காலிக கடன் எல்லை மேம்படுத்தல்கள் மற்றும்/அல்லது பண வைப்புகள் அல்லது அட்டை கணக்குகளுக்கான நிதிப் பரிமாற்றல்கள் ஆகியன எந்த வகையிலும் முற்பண எல்லையை அதிகரிக்காது. அட்டை உரிமையாளருக்கு எவ்வித முன்னறிவித்தலையும் வழங்காது வங்கியினால் இவ் வசதியினை மாற்றவோ அல்லது மீளப் பெறவோ முடியும்.

## 10. கட்டணங்கள்

10.1 வங்கியினால் அட்டை வழங்கப்படும் போது வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட இணைவுக்கட்டணத்தை வங்கிக்கு செலுத்த அட்டை உரிமையாளர் உடன்படுவதுடன், வங்கியினால் வழங்கப்படும் ஒவ்வொரு மேலதிக அட்டைக்கும் (இணை அட்டை) நிர்ணயிக்கப்படும் இணைவுக்கட்டணத்தை செலுத்தவும் உடன்படுகிறார். வங்கியினால் அட்டை வழங்கப்படும் போது இணைவுக்கட்டணம் அறவிடப்படுவதுடன், அட்டை செயற்படுத்தலில் எவ்விதமான தொடர்பையும் கொண்டிருப்பதில்லை.

10.2 அட்டையை பயன்படுத்தும் போது வருடாந்த கட்டணத்தை செலுத்த வேண்டும் என்பதுடன், அட்டை உரிமையாளருக்கு முன்கூட்டியே அந்தக்கட்டணம் தொடர்பில் அறிவித்தல் வழங்கப்படும். வங்கியினால் அட்டை வழங்கப்படும் போது வருடாந்தக்கட்டணம் அறவிடப்படுவதுடன், அட்டை செயற்படுத்தலில் எவ்விதமான தொடர்பையும் கொண்டிருப்பதில்லை.

10.3 வெளிநாட்டு முகவரி ஒன்றுக்கு அட்டை கூரியர் சேவையினூடாக அனுப்பப்படும் போது, அதற்கான கையாளல் கட்டணத்தை அட்டைக்கணக்கிலிருந்து வங்கி அறவிடும்.

10.4 அட்டையின் எல்லைப்பெறுமதியை அதிகரிப்பதற்கான கையாளல் கட்டணம் அட்டைக்கணக்கிலிருந்து அறவிடப்படும்.

10.5 அட்டையின் அறிக்கைகளின் பிரதிகளை பெற்றுக்கொள்ளவதற்கான கையாளல் கட்டணம் அட்டைக்கணக்கிலிருந்து அறவிடப்படும்.

10.6 அட்டைக்கொடுப்பனவுக்காக அட்டை உரிமையாளர் அல்லது பிரிதொரு தரப்பினரால் மேற்கொள்ளப்படும் காசோலை அல்லது இதர கொடுப்பனவுகள் எக்காரணத்துக்காகவும் மீளத் திரும்பும் சந்தர்ப்பத்தில், அதற்காக வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட கையாளல் கட்டணமொன்றை அட்டைக்கணக்கிலிருந்து வங்கி அறவிடும்.

10.7 அட்டைக்கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படும் சகல முற்பண பெறுகைகளுக்கும் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட முற்பண பெறுகைக்கான கட்டணம் அல்லது கையாளல் கட்டணம் அறவிடப்படும்.

10.8 அட்டையின் கட்டணப்பட்டியல் தயாரிக்கப்படும் போது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அட்டைக்கு நிர்ணயிக்கப்பட்ட எல்லைப்பெறுமதியை மீறும் வகையில் கணக்கு மீதி காணப்பட்டால் எல்லை மீறல் கட்டணம் அட்டைக்கணக்கிலிருந்து அறவிடப்படும். ஒரு கட்டணப்பட்டியல் தயாரிப்பு சுழற்சியின் போது இந்த கட்டணம் அறவிடப்படும். மீதி எல்லைப்பெறுமதி மீறப்பட்டுள்ளமையை கணக்கிடும் போது, கணக்கில் வைப்பிலிடப்படாத எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களையும், எதிர்கால கொடுப்பனவுக்காக அட்டை உரிமையாளரின் கோரிக்கைக்கமைய கணக்கில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள தொகை மற்றும் மூன்றாம் தரப்புடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலுக்காக செலுத்தப்பட வேண்டிய தொகை போன்றவற்றை வங்கி கவனத்தில் கொள்ளும்.

10.9 பெற்றோல், டீசல், எரிவாயு மற்றும் இலங்கையிலுள்ள எரிபொருள் நிலையங்களில் கிடைக்கும் இதர பொருட்களுக்கு கையாளல் கட்டணமொன்று வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட தொகையின் பிரகாரம் அட்டைக்கணக்கிலிருந்து அறவிடப்படும்.

10.10 விற்பனை அல்லது முற்பண பெறல் போன்ற ஆவணங்களின் போட்டோ பிரதிகளை வழங்குவதற்கான கையாளல் கட்டணம் வங்கியினால் அட்டைக்கணக்கிலிருந்து அறவிடப்படும்.

10.11 வெவ்வேறு காலப்பகுதியில் நிர்ணயிக்கப்படும் சட்ட பூர்வமான கட்டணம் பொருத்தமான வகையில் அட்டைக்கணக்கில் அறவிடப்படும்

10.12 அட்டை உரிமையாளரின் கோரிக்கைக்கமைய வழங்கப்படும் மேலதிக சேவைக்கு கட்டணம்

அறவிடுவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளதுடன், அந்த கட்டணத்தை அட்டைக்கணக்கிலிருந்து அறவிடப்படும்.

10.13 பொருள் ஒன்றை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் பற்று மற்றும் பெற்றுக்கொண்ட சேவைகள் அல்லது பொருட்களை இரத்துச்செய்வதற்காக வழங்கப்படும் வரவு ஆகியன இரு வெவ்வேறான கொடுக்கல் வாங்கல்களாகும். கட்டணப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்வனவு செய்தமைக்கான கொடுக்கல் வாங்கலுக்குரிய கொடுப்பனவை வாடிக்கையாளர் செலுத்துவதனூடாக மேலதிக கட்டணங்கள் அறவிடப்படுவதை தவிர்த்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும். யூனியன் வங்கிக்கு கிடைக்கும் பட்சத்தில், இரத்துச்செய்யும் போது, மீளளிப்பு அட்டைக்கணக்கில் வரவு வைக்கப்படும். (இரத்துச்செய்வதற்கான கட்டணம் அறவிடப்படும்) குறித்த வரவு அட்டைக்கணக்கில் சில தினங்களில் வரவு வைக்கப்படாவிடின், அது குறித்து வங்கிக்கு அட்டை உரிமையாளர் அறிவிக்க வேண்டும்.

10.14 இலங்கைக்கு அப்பால் இலங்கை ரூபாய் தவிர ஏனைய நாணயங்களில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் போது, அந்த கொடுக்கல் வாங்கல்களுக்கான பெறுமதிகள் இலங்கை ரூபாய்க்கு நாணயமாற்று விகிதங்களின் பிரகாரம் மாற்றப்பட்டு அட்டைக்கணக்கில் அறவிடப்படும். சகல வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் வங்கியினால் தீர்மானிக்கப்படும் நாணயமாற்று விகிதாசார முறை கவனத்தில் கொள்ளப்படும்.

10.15 கட்டணம் செலுத்தத் தவறிய அல்லது கட்டணம் செலுத்தத் தவறிய நிலையில் காணப்படும் அட்டை கணக்குகள் மீது தண்டப் பணம் அல்லது தண்ட வட்டி அல்லது சேகரிப்பு.்.திரட்டல் கட்டணம் ஆகியவற்றை அறவிடுவதற்கான அதிகாரத்தை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. இச்சந்தர்ப்பங்களில் வங்கி தனது சொந்த தீர்மானத்தின் அடிப்படையில் அறவிடும் பெறுமதியை தீர்மானிக்கும்.

10.16 அட்டை கொடுப்பனவுகள் வெளியக கட்டண திரட்டல் பகுதியில் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில், வெளியக கட்டண திரட்டல் பகுதி கட்டணமொன்றை அறவிடுவதற்கான அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளது.

10.17 தன்னியக்க டெலர் இயந்திரங்கள் அல்லது கிளைகள் அல்லது பணம் விநியோகிக்கும் நிறுவனங்கள் அல்லது முகவர்கள் போன்றவற்றினூடாக அட்டை உரிமையாளரால் பெற்றுக்கொள்ளப்படும் முற்பண பெறுகைகளுக்கு ATM, வங்கி, நிறுவன, முகவர், உள்நாட்டு அல்லது நாடுகளில் காணப்படும் எல்லை மற்றும் வரையறைகளுக்கமைய அமைந்திருக்கும். மத்திய வங்கி மற்றும் நாணய பரிமாற்று திணைக்களத்தின் விதிமுறைகள் போன்றன பொருந்தும். வங்கியினால் வழங்கப்பட்ட PIN இலக்கமின்றி, அட்டை உரிமையாளரால் ATM இயந்திரங்களிலிருந்து முற்பணப்பெறுகைகளை மேற்கொள்ள முடியாது. விற்பனை நிலையங்களில் அல்லது வங்கி கவுன்டர்களில் ‘POS withdrawal’ ஆக மேற்கொள்ளப்படும் முற்பணப்பெறுகைகளின் போது வங்கியினால் நிர்ணயிக்கப்படும் அதியுயர் தொகை பொருத்தமானதாக அமைந்திருக்கும்.

10.18 பொருட்கள் மற்றும் சேவைகளை தவணை முறை கொடுப்பனவு மேற்கொள்வதற்காக அட்டை உரிமையாளர் பயன்படுத்தியிருந்தால், குறித்த நிலுவைத்திகதியில் அந்த தவணைக்கொடுப்பனவை அட்டைக்கணக்கில் போதியளவு மீதி காணப்படும்பட்சத்தில் மேற்கொள்வதற்கு வங்கிக்கு அட்டை உரிமையாளர் அங்கிகாரம் வழங்குவதுடன், அட்டைக்கணக்கில் அது நிலுவைத்திகதியை எய்தும் போது அவற்றை செலுத்துவதற்கும் உடன்படுகிறார்.

10.19 வங்கியினால் வெவ்வேறு காலப்பகுதியில் வழங்கப்படும் சலுகைகள் அல்லது விலை

விலக்கழிப்புகள் போன்றன வங்கியின் தீர்மானத்துக்கமைய மீளப்பெறப்படும் அல்லது மட்டுப்படுத்தப்படும். அட்டை வகை மற்றும் சூழ்நிலைகளுக்கமைய சில கட்டணங்களை விலக்கழிப்பதற்கான தீர்மானத்தை வங்கி மேற்கொள்ளும்.

10.20 அட்டையின் மீது பொருந்தும் கட்டணங்கள், தரகுகள், தண்டங்கள் மற்றும் எல்லைப்பெறுமதிகள் போன்ற விவரங்கள் முன்னறிவித்தலின்றி வேறுபடக்கூடும் என்பதுடன், வங்கியினால் வெளியிடப்படும் கட்டண விவரக்கோவையில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதன் பிரதிகளை நாடு முழுவதிலும் காணப்படும் வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம். சகல கட்டணங்கள், தரகுகள், வட்டி வீதங்கள், தண்டங்கள் மற்றும் எல்லைப்பெறுமதிகள் போன்றன முன்னறிவித்தல் எதுவுமின்றி மாறுபடக்கூடும் என்பதுடன், இது வங்கியின் சுய தீர்மானத்தின் பிரகாரம் அமைந்திருப்பதுடன், ஏதேனும் மாற்றங்கள்/உள்ளடக்கங்கள் போன்றன மேற்கொள்ளப்படின் அது தொடர்பில் அட்டை உரிமையாளருக்கு கட்டணப்பட்டியலுடனான அறிவித்தல் அல்லது இலங்கையில் பிரசுரமாகும் பத்திரிகைகள் ஊடாக அல்லது யூனியன் வங்கிக்கிளைகளில் காணப்படும் அறிவித்தல் பலகைகளில் பிரசுரிப்பதனூடாக அல்லது வங்கியின் இணையத்தளத்தில் பிரசுரிப்பதனூடாக அறியத்தரும்.

## 11. அறிக்கைகள், கொடுப்பனவுகள் மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளாவிடின் ஏற்படும் பெறுபேறுகள்

11.1 ஒவ்வொரு மாதத்திலும் கட்டணப்பட்டியல் அறிக்கை தயாரிக்கப்பட்டு பிரதான அட்டை உரிமையாளருக்கு அனுப்பப்படும், இதில் அட்டைக்கணக்கில் நிலுவையிலுள்ள முழுத்தொகை, செலுத்தப்பட வேண்டிய ஆகக்குறைந்த நிலுவை, செலுத்த வேண்டிய இறுதித்திகதி போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

11.2 செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை வங்கியினால் வெவ்வேறு காலப்பகுதியில் தீர்மானிக்கப்படும், இது நிலுவையிலுள்ள மொத்தத்தொகையின் சதவீதமாக கணக்கிடப்படும், அல்லது மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல் அல்லது கட்டண வகை அல்லது நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் என்பவற்றில் உயர் தொகை என்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட மொத்த செலுத்தப்பட வேண்டிய தொகை குறைவாயின், செலுத்தப்பட வேண்டியுள்ள ஆகக்குறைந்த பெறுமதி மொத்த செலுத்தப்பட வேண்டிய தொகைக்கு நிகரானதாக அமைந்திருக்க வேண்டும்.

11.3 சகல கட்டணப்பட்டியல் அறிக்கைகளும் சாதாரண தபால் மூலமாக அனுப்பப்படும். அல்லது அட்டை உரிமையாளர் கோரும் பட்சத்தில் மின்னஞ்சல் ஊடாக (e-அறிக்கை) அட்டை உரிமையாளர் எழுத்து மூலம் வங்கிக்கு வழங்கியிருந்த முகவரிக்கு அனுப்பப்படும். சாதாரண தபால் மூலம் அனுப்பப்படுமாயின், அனுப்பி 48 மணி நேரத்தினுள் அறிக்கை அட்டை உரிமையாளரை சென்றடைந்ததாக கருதப்படும், அல்லது மின்னஞ்சல் ஊடாக அனுப்பப்படுமாயின், வங்கியின் மின்னஞ்சல் சேர்வரிலிருந்து அனுப்பப்பட்டவுடன் அட்டை உரிமையாளரை சென்றடைந்ததாக கருதப்படும். கட்டணம் செலுத்தாமல் இருப்பதற்கு, கட்டணப்பட்டியல் அறிக்கை கிடைக்காமையை ஒரு காரணமாக குறிப்பிட முடியாது.

11.4 மின்னஞ்சல் ஊடாக அறிக்கையை பெறும் அட்டை உரிமையாளர்களுக்கு, தபால் மூலம் அறிக்கை

அனுப்பப்படமாட்டாது. அட்டை உரிமையாளருக்கு அறிக்கைகள் அல்லது சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் தேவைப்பட்டால், அவற்றை வேறாக கோரலாம். இது சேவைக்கட்டண அறவீட்டுக்கு உட்படும்.

11.5 குறித்த கட்டணப்பட்டியல் அறிக்கை காலப்பகுதியில் அட்டை உரிமையாளர் எவ்விதமான கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ளாவிடின் மற்றும் செலுத்த வேண்டியுள்ள நிலுவைத்தொகை பூஜ்ஜியமாக அல்லது மறைப்பெறுமதியில் காணப்பட்டால் அறிக்கை அனுப்பப்படமாட்டாது.

11.6 அட்டை உரிமையாளர் செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்ச கட்டணம் அல்லது மொத்த ஆகக்குறைந்த கொடுப்பனவை குறித்த நிலுவைத்திகதிக்கு (குறைந்த பட்ச கட்டணம் செலுத்தப்பட வேண்டிய திகதி) முன்னதாக செலுத்தத்தவறினால், காலம் கடந்த கட்டணம் அட்டைக்கணக்கில் அறவிடப்படும். குறித்த நிலுவைத்திகதிக்கு முன்னதாக ஆகக்குறைந்த தொகையை செலுத்த தவறும்பட்சத்தில், அட்டை உரிமையாளருக்கு அட்டையை பயன்படுத்த முடியாத இடரை எதிர்கொள்ள நேரிடும் (தற்காலிகமான அல்லது நிலையான / பகுதியளவு அல்லது முழுமையான). இந்த சந்தர்ப்பங்களில், பிரதான அட்டை மற்றும் மேலதிக அட்டைகள் போன்றவற்றை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும் அத்துடன் இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் தகவல் திரட்டில் மற்றும் இதர ஒழுங்குபடுத்தல் அறிக்கைகளில் எதிர்மறையாகவும் பட்டியலிடப்படும். இதனூடாக அட்டை உரிமையாளர் இதர வங்கிகள் அல்லது நிதிசார் நிறுவனங்களுடன் கொண்டுள்ள அல்லது பேண எதிர்பார்க்கும் உறவுகளை பாதிக்கும்.

11.7 அட்டை பாவனையிலுள்ள காலப்பகுதியில், நிலுவையிலுள்ள முழுத்தொகையை முழுமையாக செலுத்துமாறு அட்டை உரிமையாளரை கோரும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

11.8 அட்டை கணக்கு சார்பாக அட்டை உரிமையாளரினால் வங்கிக்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் அனைத்தும் அட்டை உரிமையாளரினால் வங்கிக்கு பொறுப்பாகவுள்ள கொடுப்பனவுகளை மீட்பதற்காக பயன்படுத்தப்படும். நிலுவை கொடுப்பனவு இறுதித்திகதிக்கு முன்னதாக மொத்த நிலுவைத்தொகையை அட்டை உரிமையாளர் செலுத்தத்தவறும்பட்சத்தில், கொடுக்கல் வாங்கல் அல்லது கட்டணம் பதியப்பட்ட திகதியிலிருந்து தினசரி காணப்படும் மீதியின் மீது மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கட்டணங்கள் மீது நிதிக்கட்டணம் அறவிடப்படும். இது குறித்த தீர்மானத்தை வங்கி மேற்கொள்ளும்.

11.9 இந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவையிலுள்ள சகல தொகையும் இலங்கை ரூபாயில் மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கை ரூபாய்க்கு மாறாக வேறு நாணயத்தில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டால், குறித்த கொடுப்பனவை நிராகரிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டிருக்கும் அல்லது அக்காலப்பகுதியில் காணப்படும் நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் இலங்கை ரூபாய்க்கு மாற்றி அறவிடும் அதிகாரத்தை கொண்டிருக்கும். இதன்போது எழக்கூடிய நாணயமாற்று இடர்கள், இழப்புகள், தரகுகள், கட்டணங்கள் போன்றவற்றை அட்டை உரிமையாளர் ஏற்க வேண்டும்.

11.10 வங்கிக்கு கட்டணம் கிடைக்கப்பெற்று, அதை அட்டைக்கணக்கில் வைப்புச்செய்யும் போது மாத்திரமே கொடுப்பனவு பெறப்பட்டதாக கருதப்படும். அட்டை உரிமையாளர் கொடுப்பனவை அனுப்பியவுடன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதாக கருதப்படமாட்டாது. அட்டைக்கணக்கில் பணக்கொடுப்பனவுகள் வைப்புச்செய்யப்பட்டதன் பின்னரே அவை மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளாக வங்கியினால் கவனத்தில் கொள்ளப்படும்.

11.11 காசோலை வைப்பு கொடுப்பனவு மாறிய பின்னரே கொடுப்பனவு பெறப்பட்டதாக வங்கியினால் கவனத்தில் கொள்ளப்படும்.

11.12 அட்டை உரிமையாளர் தமது சேமிப்பு அல்லது நடைமுறை கணக்கின் மீது நேரடிப்பற்று கட்டளையை யூனியன் வங்கிக்கு வழங்கலாம். இதன் பிரகாரம், அட்டைக்கணக்குக்கு நிலுவைத்திகதியில் காணப்படும் தொகையில் குறித்த சதவீதத்தொகை வங்கியினால் அட்டை உரிமையாளரின் வங்கிக் கணக்கிலிருந்து ஒவ்வொரு மாதமும் அறவிடப்படும். எதிர்வரும் நிலுவைத்திகதிக்கு ஆகக்குறைந்தது இரு வாரங்களுக்கு முன்னதாக இந்த கட்டளையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் அல்லது நீக்கம் குறித்து வங்கிக்கு அட்டை உரிமையாளர் அறிவிக்க வேண்டும். குறித்த செலுத்தல் தொகைக்காக வங்கிக்கு நேரடிப்பற்று கட்டளை வழங்கப்பட்டிருந்தால், பின்வரும் மேலதிக நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் பொருத்தமானவையாக அமையும்.

11.13 வழங்கப்படும் காசோலைகள் அல்லது செலுத்துவதற்கு உடன்படும் எந்தவொரு ஏற்பாடுகளையும் முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிப்பதற்கு வங்கிக்கு அதிகாரம் காணப்படுகிறது என்பதற்கு அட்டை உரிமையாளர் உடன்படுகிறார்.

11.14 நிலுவைத்தினத்துக்கு முன்னைய தினம் குறித்த நிலை கட்டளையை பூர்த்தி செய்வதற்கு அவசியமான தொகை குறித்த கணக்கில் காணப்படுவதை அட்டை உரிமையாளர் உறுதி செய்ய வேண்டும். குறித்த கணக்கில் போதியளவு தொகை காணப்படாதவிடத்து, வங்கி தனது சுய தீர்மானத்தின் அடிப்படையில் மேலதிகப்பற்று வசதியை வழங்கக்கூடும். நிலுவையிலுள்ள முழுத்தொகையையும் கட்டணங்கள், கூலிகள் மற்றும் இதர நிதிக்கட்டணங்கள் அடங்கலாக செலுத்துவற்கு அட்டை உரிமையாளர் கடமைப்பட்டுள்ளார்.

11.15 நிலை கட்டளைக்கமைய ஒரு தடவை மாத்திரம் கணக்கிலிருந்து பணத்தை பெற்றுக்கொள்ள வங்கி முயற்சி செய்யும், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் முயற்சி செய்ய வேண்டிய பொறுப்புகளை வங்கி கொண்டிருக்கவில்லை என்பதற்கு அட்டை உரிமையாளர் உடன்படுகிறார்.

11.16 அறிக்கை திகதி மற்றும் நிலுவைத்திகதி இடையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் சகல கொடுப்பனவுகளும், நேரடி பற்று கட்டளை பிரகாரம் கொடுப்பனவு செலுத்தப்படுகையில் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதை அட்டை உரிமையாளர் ஏற்றுக்கொள்கிறார்.

11.17 குறிப்பிட்ட செலுத்துகை கணக்கில் போதியளவு மீதி காணப்படாவிடின், பகுதியளவு கட்டணம் அறவிடப்பட்ட போதிலும் சேவை கட்டணமொன்றை வங்கி அறவிடும். குறித்த கட்டணம் வங்கியின் தீர்மானத்தின் பிரகாரம் மாறுபடக்கூடும்.

11.18 நிலை கட்டளை உத்தரவின் பிரகாரம் முழுத்தொகையை ஈடுசெய்ய போதியளவு மீதி செலுத்துகை கணக்கில் காணப்படாவிடின் கணக்கில் காணப்படும் மீதியை வங்கி பெற்றுக்கொள்ளும். இவ்வாறு திரட்டப்பட்ட தொகை அட்டை உரிமையாளரின் ஆகக்குறைந்த நிலுவைத்தொகையை ஈடுசெய்ய முடியாததாயின், பொருத்தமான நிதிக்கட்டணங்கள் மற்றும் கால தாமத கொடுப்பனவு கட்டணம் போன்றன அறவிடப்படும்.

11.19 மூன்றாம் தரப்பு வலையமைப்புகளினூடாக வங்கியின் கவுன்டர்கள் ஊடாக மற்றும் வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய பங்காளர் வலையமைப்புகளினூடாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு அவை அட்டை உரிமையாளரின் கணக்குக்கு கொடுப்பனவு மேற்கொள்வதில் கால தாமதம் ஏதும் ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை வங்கி ஏற்காது. இவ்வாறு தாமதமடையும் சந்தர்ப்பத்தில் வங்கியினால் தீர்மானிக்கப்படும் கால தாமத கொடுப்பனவு கட்டணமொன்று அறவிடப்படும். மூன்றாம் தரப்பினூடாக மேற்கொள்ளப்படும் சகல கொடுப்பனவுகளும் கையாளல் கட்டணங்களுக்கு உட்படுத்தப்படும், வங்கியினால் தீர்மானிக்கப்படும் இந்த கட்டணம் அட்டை உரிமையாளரின் கணக்கிலிருந்து அறவிடப்படும்.

## 12. ஒன்லைன் வங்கிச்சேவை மற்றும் மொபைல் வங்கிச்சேவை

அட்டை உரிமையாளர் ஒன்லைன் வங்கியியல் அல்லது மொபைல் வங்கியியல் சேவையை யூனியன் வங்கியிடமிருந்து பெற்றிருந்தால் அல்லது எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள தீர்மானித்திருந்தால், தமது கடன் அட்டைகள் குறித்த விடயங்களை சுயமாக இந்த சேவைகளினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதை அவர் புரிந்து கொள்வதுடன், அதற்கு உடன்படுகிறார். இந்த சேவைகளை பயன்படுத்தும் போது அச்சேவைகள் தொடர்பான வங்கியின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்றன பொருத்தமானவையாக அமைந்திருக்கும்.

## 13. மறுப்புகள்

13.1 விற்பனை நிலையமொன்றிலிருந்து வங்கிக்கு கோரப்படும் கட்டணம் அல்லது இதர கொடுப்பனவு கோரிக்கை என்பதன் மூலமாக குறித்த கட்டணம் அல்லது கொடுப்பனவு குறித்த பெறுமதிக்கு அந்த விற்பனை நிலையத்தில் முறையாக இடம்பெற்றுள்ளது என்பதற்கு ஆதாரமாகும். மாறாக, அட்டை காணாமல் போயிருந்தால் அல்லது களவாடப்பட்டிருந்தால் அது தொடர்பில் வங்கிக்கு முறையாக அறிவித்தல் வழங்கப்பட வேண்டும். இது குறித்த விதிமுறைகளை 14ம் பிரிவில் பார்வையிடலாம். அட்டை மோசடியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ள என்பதை உறுதிசெய்யும் சிரமத்தை அட்டை உரிமையாளர் ஏற்க வேண்டும். இந்த விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவு கோரிக்கைகளில், அட்டை உரிமையாளரால் எந்தவொரு சேவை வழங்கும் நிலையத்திலும் அட்டையை பயன்படுத்துவதனூடாக எழும் சகல விதமான செலவீனங்களும் அடங்கும் என்பதுடன், கட்டணமாக உள்ளடக்கப்படாத இதர ஹோட்டல் கட்டணங்கள் போன்றனவும் இதில் அடங்கும். கட்டண அறவீட்டு படிவத்தில் அட்டை உரிமையாளரின் கையொப்பம் காணப்படுவதுடன், அட்டை இலக்கமும் பதியப்பட்டிருக்கும் இதுவே வங்கிக்கும் அட்டை உரிமையாளருக்கும் இடையில் குறித்த கொடுக்கல் வாங்கல் நடைபெற்றமைக்கான ஆதாரமாக அமையும். அத்துடன், இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுக்கு, அட்டை உரிமையாளருக்கு உரிய சேவைகள் அல்லது பொருட்கள் உயர் தரத்தில் கிடைத்துள்ளன என்பதை உறுதி செய்வது வங்கியின் பொறுப்பாக அமையாது.

13.2 அட்டை உரிமையாளருக்கு தமது பிரதான அட்டைகள் மற்றும் மேலதிக அட்டை(கள்) மூலமாக மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்கள் பற்றி கட்டணப்பட்டியல் அறிக்கைகள் மற்றும் அல்லது எஸ்எம்ஸ் (குறுந்தகவல்) அலேர்ட்கள் மூலமாக அறிவிக்கப்படும். அட்டை உரிமையாளருக்கு எஸ்எம்எஸ் மூலம் அறிவிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் அட்டை உரிமையாளர் உடன்படாவிடின் அது கிடைத்து 24 மணி நேரத்தினுள் வங்கிக்கு அறிவிக்க வேண்டும். கட்டணப்பட்டியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் தொடர்பில் அட்டை உரிமையாளர் உடன்படாவிடின், அறிக்கை உருவாக்கப்பட்ட திகதியிலிருந்து 20 தினங்களுக்குள் வங்கிக்கு அது தொடர்பில் அறிவிக்க வேண்டும். இவ்வாறு அறிவிக்க தவறும் பட்சத்தில், கட்டணப்பட்டியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல கட்டணங்களும் சரியானவை என கருத்தில் கொள்ளப்படும். அட்டை உரிமையாளர் மறுப்புத்தெரிவிக்கும் பட்சத்தில், அது தொடர்பில் எழுமாற்றாக நம்பிக்கை அடிப்படையில் குறித்த கட்டணம் தொடர்பில் காணப்படும் பிரச்சனையை தீர்த்து வைக்க வங்கி முயற்சி செய்யும். அவ்வாறான செயற்பாட்டின் பின்னர், கட்டணப்பட்டியல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள கட்டணம் சரியானது என உறுதி செய்யப்பட்டால், அதனை கட்டண சிட்டையின் பிரதியுடன் அல்லது கொடுப்பனவு கோரிக்கையுடன் அட்டை உரிமையாளருக்கு வங்கி அறிவிக்கும்.

இதனைத்தொடர்ந்து குறித்த கட்டணத்தை, பொருத்தமான வட்டி மற்றும் ஏனைய இதர கட்டணங்களுடன் அட்டை உரிமையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

13.3 கொடுக்கல் வாங்கல் மறுப்புக் காரணமாக ஏற்படக்கூடிய மீளளிப்புகள் அல்லது திரும்பல்கள் அடங்கலான இரத்துச்செய்தல், திரும்பல்கள் அல்லது மீளளிப்புகள் போன்றவற்றால் ஏற்படக்கூடிய எந்தவொரு நாணயப்பரிமாற்று இழப்புகளையும் அட்டை உரிமையாளர் ஏற்க வேண்டும்.

## 14. தொலைந்த அல்லது திருடப்பட்ட அட்டைகள்

14.1 அட்டை தொலைந்திருந்தால் அல்லது காணாமல் போயிருந்தால், அது தொடர்பில் இலங்கையிலுள்ள வங்கியின் கார்ட் சென்ரருக்கு அட்டை உரிமையாளர் உடனடியாக அறிவிக்க வேண்டும். இந்த காணாமல் போன அல்லது திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் தாம் வசிக்கும் பகுதிக்கு பொறுப்பான காவல் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் அட்டை உரிமையாளர் பதிய வேண்டும். குறித்த சம்பவம் தொடர்பில் வங்கியின் கார்ட் சென்ரருக்கு அறிவிக்கப்படும் வரையில் பதியப்படும் கட்டணங்களுக்கு அட்டை உரிமையாளர் பொறுப்பாக அமைந்திருப்பார். அட்டை தொலைந்தமை தொடர்பில் தொலைபேசி ஊடாக அட்டை உரிமையாளர் அறிவிக்க முடியும் என்பதுடன், அதனைத்தொடர்ந்து வங்கியின் கார்ட் சென்ரருக்கு அட்டை தொலைந்தமையை உறுதி செய்தும், அறவிடப்பட்ட கட்டணங்களை நிராகரித்தும் பிரசித்த நொத்தாரிசினால் உறுதி அங்கிகரிக்கப்பட்ட உறுதிமொழி ஆவணமொன்றை சமர்ப்பிப்பதுடன், குறித்த அட்டை தொலைந்தமை தொடர்பில் காவல் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டு அறிக்கையின் கையொப்பமிடப்பட்ட பிரதியொன்றையும் அனுப்ப வேண்டும். போதியளவு அல்லது பகுதியளவு உறுதிப்படுத்தல்களுடன் தற்காலிகமாக அட்டை கணக்கை வங்கி இரத்துச்செய்யும், இதன் காரணமாக அட்டை உரிமையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு பொறுப்பேற்காது.

14.2 இலங்கையிலுள்ள வங்கியின் கார்ட் சென்ரருக்கு முறையான அறிவித்தல் வழங்கப்படும் வரையில், அட்டையில் பதிவாகியுள்ள கொடுக்கல் வாங்கல்களுக்கும் நிலுவையிலுள்ள பற்றுக்களுக்கும் அட்டை உரிமையாளர் பொறுப்பேற்க வேண்டும்.

14.3 அட்டை தொலைந்ததாக, களவாடப்பட்டதாக அல்லது பழுதடைந்ததாக கார்ட் சென்ரருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர், ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் அட்டை உரிமையாளருக்கு அது திரும்பக்கிடைத்தால் அதனை பயன்படுத்தக்கூடாது. இதன் போது குறித்த கொடுக்கல் வாங்கல்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர், அட்டை திரும்பக்கிடைத்தால், குறித்த அட்டையை அழித்துவிடுவது அட்டை உரிமையாளரின் முழுப்பொறுப்பாக அமையும். எவ்வேளையிலும் அட்டையை பாதுகாப்பாக பேணுவது அட்டை உரிமையாளரின் பொறுப்பாகும், அதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை வங்கி இனங்காணுமாயின், அச்சந்தர்ப்பத்தில் அட்டைக்கணக்கை இரத்துச்செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டிருக்கும்.

14.4 யூனியன் வங்கிக்கு, தமது அட்டையில் மோசடி இடம்பெறக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதாக முறையிட்டதன் பின்னர், அட்டையை செயற்படுத்துமாறு வங்கிக்கு கோரினால், அதன் பின்னர் அட்டையில் இடம்பெறக்கூடிய மோசடியான கொடுக்கல் வாங்கல்களுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

14.5 அட்டை தொலைத்திருந்தால், திருடப்பட்டிருந்தால் அல்லது தவறுதலாக பயன்படுத்தப்பட்டிருந்தால்

அது தொடர்பில் அட்டை உரிமையாளர் தம்வசம் உள்ள சகல விவரங்களையும் வங்கிக்கு வழங்கி, அதனூடாக தொலைந்த அட்டையை மீட்டெடுப்பதற்கு வங்கிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க உடன்படுகிறார்.

14.6 தொலைந்த அட்டைகளுக்காக, அது தொடர்பில் விற்பனை வலையமைப்பு அறிவிப்பதற்காக ஏற்படும் செலவீனத்தை ஈடு செய்வதற்கு கட்டணமொன்றை வங்கி அறிவிடும்.

14.7 அட்டை உரிமையாளரின் தொலைந்த அல்லது திருடப்பட்ட அட்டைக்கு மாற்றீடாக சுயமாக வங்கியினால் மாற்று அட்டை ஒன்று வழங்கப்படமாட்டாது. மாற்று அட்டை ஒன்றை பெற்றுக்கொள்ள அட்டை உரிமையாளர் கோரும்பட்சத்தில் அதற்கான கையாளல் கட்டணம் அட்டைக்கணக்கிலிருந்து அறவிடப்படும். இந்த கட்டணம் தொடர்பான தீர்மானத்தை வங்கி மேற்கொள்ளும். முன்பிருந்த அட்டைக்கு பொருத்தமான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் இந்த அட்டைக்கும் பொருத்தமானதாக அமையும்.

14.8 PIN இலக்கம் மற்றும் அட்டையின் உறுதிப்படுத்தல் இலக்கம் ஆகியவற்றை பாதுகாப்பாக பேணுவதற்கு அட்டை உரிமையாளர் எப்போதும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பிரிதொரு நபருக்கு PIN இலக்கம் மற்றும் அல்லது அட்டையின் உறுதிப்படுத்தல் இலக்கம் ஆகிய தெரிந்திருக்கக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். PIN இலக்கம் மற்றும் அல்லது அட்டையின் உறுதிப்படுத்தல் இலக்கம் தொலைந்தால், திருடப்பட்டால் அல்லது அறிமுகமில்லாதவருக்கு வெளியப்படுத்த நேரிட்டால், அட்டை உரிமையாளர் உடனடியாக அது தொடர்பில் வங்கிக்கு இந்த ஆவணத்தின் 14 (a) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கமைய அறிவிக்க வேண்டும்.

## 15. காப்புறுதி பாதுகாப்பு

வங்கி தனது சொந்த தீர்மானத்தின் பிரகாரம், அட்டை உரிமையாளருக்கு வெவ்வேறு காப்புறுதித்தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும். இந்த காப்புறுதித்திட்டங்களின் கீழ் எழும் நஷ்டஈடுகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் முழு அதிகாரத்தையும் பொறுப்பையும் குறித்த காப்புறுதி நிறுவனம் கொண்டிருக்கும் என்பதற்கு அட்டை உரிமையாளர் உடன்படுவதுடன், இவ்வாறான நஷ்டஈடுகளை பெற்றுக்கொடுப்பதற்காக வங்கியை எந்த வகையிலும் அழுத்தங்களுக்கு உட்படுத்த முடியாது என்பதற்கும் உடன்படுகிறார். இந்த காப்புறுதித்திட்டம் மற்றும் அதன் அனுகூலங்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அட்டை உரிமையாளருக்கு முன்னறிவித்தலின்றி மீளப்பெறக்கூடிய அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளது. இவ்வாறான காப்புறுதித்திட்டங்களுக்கு பொருத்தமான பிரிதொரு நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ஏற்புடையதாக அமையும்.

## 16. எஸ்எம்எஸ் அலேர்ட்ஸ் வசதியின் பயன்பாடு

16.1 அட்டை கொடுக்கல் வாங்கல்கள், அட்டையுடன் தொடர்புடைய செயற்பாடுகள் மற்றும் கொடுப்பனவு நினைவூட்டல் பற்றிய தகவல்களை எஸ்எம்எஸ் அலேர்ட்ஸ் ஊடாக வங்கி அனுப்பும். இவ்வாறான தகவல்களை அனுப்பும் போது அதனால் ஏற்படக்கூடிய கீர்த்தி நாம பாதிப்பு, மன உளைச்சல் மற்றும் தகவல் கசிவு போன்ற இழப்புகளுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பாக அமையாது.

16.2 இந்த சேவை இலங்கையினுள் தொலைத்தொடர்பாடல் உட்கட்டமைப்பு, வலையமைப்பு மற்றும் சேவைகள் போன்றவற்றில் இந்த வசதி தங்கியுள்ளது என்பதை வாடிக்கையாளர் உடன்படுகிறார். தொலைத்தொடர்பாடல் துறையில் பாதிப்பை ஏற்படுத்தும் காரணிகளால் இந்த அலேர்ட்கள் வங்கியினால் அனுப்பப்படும் நேரங்களில் தாக்கம் ஏற்படும் என்பதை அட்டை உரிமையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும். தகவல் கிடைக்காமை அல்லது கால தாமதமான அலேர்ட்கள் கிடைக்கின்றமை, தவறுகள், காணாமல் போதல்கள், முழுமையாக கிடைக்காமை அல்லது தவறுதலான அனுப்புதல்கள் போன்வற்றுக்கு வங்கி அல்லது அதன் சேவை வழங்குநர்கள் எவ்வித பொறுப்பையும் ஏற்கமாட்டார்கள். சில நாடுகளில் காணப்படும் ஒழுங்குபடுத்தல் விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக இந்த சேவை அந்நாடுகளில் கிடைக்காது.

16.3 முன்னறிவித்தல் எதுவுமின்றி, எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் இந்த சேவைக்காக கட்டணம் எதனையும் அறவிட, இச்சேவையை இரத்துச்செய்ய அல்லது மற்றும் சேவையை நிறுத்திக்கொள்ள மற்றும் சேவையின் அளவை மாற்றியமைக்க வங்கி அதிகாரத்தை கொண்டுள்ளது.

## 17. தொலைபேசி, இணையம், டெலெக்ஸ், தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் அறிவுறுத்தல்களுக்கான அங்கிகாரம் மற்றும் நஷ்ட ஈடு

17.1 எந்தவொரு அறிவித்தல், அறிவுரை, கோரிக்கை அல்லது இதர தொடர்பாடல் போன்ற எதனையும் எக்காலத்திலும் தொலைபேசி, இணையம், டெலெக்ஸ், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் ஊடாக அட்டை உரிமையாளர் அல்லது அவர் சார்பாக வங்கிக்கு வழங்குவதில் தங்கியிருக்குமாறு அட்டை உரிமையாளர் அங்கிகரிப்பதுடன், குறித்த அறிவித்தல்களை பெற்றுக்கொள்ளும் போது நிலவும் எந்த சூழலிலும் குறித்த அடையாளத்தை உறுதி செய்த பின்னர் அவற்றை வழங்குவதற்கு வங்கி அதிகாரத்தை கொண்டுள்ளதையும் ஏற்றுக்கொள்கிறார். அறிவுறுத்தல்கள் கிடைத்த திகதி மற்றும் நேரம் தொடர்பாக வங்கி உறுதி செய்வதை அட்டை உரிமையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

17.2 அட்டை உரிமையாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை முழு அங்கிகாரத்துடன் செயற்படுத்த வங்கி உரிமையை கொண்டுள்ளதுடன், அதனுடன் தொடர்புடைய அல்லது வங்கியினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் கட்டணம் செலுத்தல் அல்லது எந்தவொரு கணக்கிலிருந்தும் பணத்தை எடுத்தல் வைப்புச்செய்தல் அல்லது பணம் மற்றும் அல்லது ஆவணங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் அல்லது அட்டை உரிமையாளரை எந்தவொரு உடன்படிக்கையுடனும் இணைப்பது, அல்லது சம்பந்தப்பட்ட பணத்தை ஏற்பாடு செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும், அறிவுறுத்தல்கள் தொடர்பில் அட்டை உரிமையாளரின் தரப்பிலிருந்து எழக்கூடிய தவறுகள், தெளிவற்ற தன்மை, தவறான புரிந்துணர்வுகள் அல்லது தெளிவின்மை போன்றவற்றை கவனத்தில் கொள்ளாது.

17.3 அட்டை உரிமையாளரின் அங்கிகாரம் மற்றும் உறுதிக்கமைய வங்கி செயற்படுவதன் காரணமாக, அறிவுறுத்தல் காரணமாக ஏற்படக்கூடிய சகல இழப்புகள், நஷ்டஈடுகள், செயற்பாடுகள், செயன்முறைகள், நிபந்தனைகள், சேதங்கள், செலவுகள் மற்றும் இதர செலவீனங்கள் போன்றவற்றிலிருந்து அட்டை உரிமையாளர் வங்கியை விடுவிப்பதாக உறுதி செய்கிறார்.

17.4 இந்த அங்கிகாரம் மற்றும் உறுதிமொழி தொடர்பான நியதிகள் முழு அளவில் செயற்பாட்டில் இருக்கும் என்பதுடன், அதனை நிறைவுக்கு கொண்டு வருமாறு அட்டை உரிமையாளர் வங்கிக்கு

அறிவிக்கும் வரையில் அதை நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அதனை இரத்துச்செய்யுமாறு கோரி அது அமலாக்கப்படும் வரையில் இடம்பெற்ற சகல நடவடிக்கைகளிலிருந்தும் அட்டை உரிமையாளர் விடுவிக்கப்படமாட்டார் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## 18. பணம் வசூலித்தல்

தனது சொந்த இடர் நிலைக்கமையவும் அட்டை உரிமையாளரின் செலவில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்டு அட்டை உரிமையாளரிடமிருந்து வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள தொகையை வசூலிப்பதற்கான அதிகாரத்தை யூனியன் வங்கி கொண்டுள்ளது. இதன் போது குறித்த நபர்களுக்கு வாடிக்கையாளரின் விவரங்களை வழங்கும் அதிகாரத்தையும் வங்கி கொண்டுள்ளது. குறித்த நபர்களுக்கு இந்த வசூலிப்பை மேற்கொள்வதற்கு பொருத்தமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான சகல விதமான அதிகாரங்களையும் வங்கி வழங்கும்.

அட்டை உரிமையாளரிடமிருந்து சேகரிக்க வேண்டிய நிலுவைத்தொகையை திரட்டுவதற்காக தனது வசூலிப்பு நிறுவனத்துக்கு அதிகாரமளித்து அதனூடாக பணத்தை திரட்டிக்கொள்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. இதற்காக ஏற்படும் செலவை அட்டை உரிமையாளரின் கணக்கிலிருந்து அறவிடவும் முடியும்.

## 19. எதிரீடு

அட்டை கணக்கின் பொறுப்புக்கமைய, யூனியன் வங்கியில் அல்லது அதன் துணை நிறுவனங்களில் அட்டை உரிமையாளர் தமது சொந்தப்பெயரில் அல்லது மற்றுமொருவருடன் இணைந்து பேணும் சகல விதமான கணக்குகள், பிணைகள், சொத்துக்கள், ஆவணங்கள் ஆகியவற்றின் மீது நிலுவையிலுள்ள தொகையை எதிரீடு செய்வதற்கான உரிமையை யூனியன் வங்கியும் அதன் துணை நிறுவனங்களும் கொண்டுள்ளன. அட்டை உரிமையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவையிலுள்ள தொகையை எவ்வித முன்னறிவித்தல்களுமின்றி, அட்டை உரிமையாளர் கொண்டுள்ள எந்தவொரு கணக்கிலும் எந்தவொரு நாணயத்திலும் கொண்டிருக்கும் பணத்திலிருந்து எதிரீடு செய்ய முடியும். யூனியன் வங்கி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் ஆகியவற்றின் உரிமைகள், அட்டை உரிமையாளரின் வங்கி திவால் நிலை, மரணம் அல்லது தலைமறைவு போன்ற செயற்பாடுகளினால் பாதிப்படைய முடியாது. அட்டை உரிமையாளரின் சொந்த பொறுப்பு மற்றும் பற்று அடிப்படையில் இணைந்த கணக்கை பேணும் ஏனைய நபர்களுடன் எழக்கூடிய பிணக்குகளை அல்லது மறுப்புகள் தீர்க்கப்பட வேண்டும்.

19.1 மேலே தெரிவிக்கப்பட்ட வங்கியின் உரிமைக்கு மேலதிகமாக, யூனியன் வங்கி மற்றும் அதன் இதர குழும நிறுவனங்கள் ஆகியன சட்டத்தின் பிரகாரம், ஒப்பந்த அடிப்படையில் அல்லது யூனியன் வங்கி அங்கிகரிகப்பட்டுள்ள உரித்துடைய விடயங்களாக, (அ). யூனியன் வங்கியுடன் அல்லது அதன் துணை நிறுவனங்களுடன் அட்டை உரிமையாளர் பேணும் எந்த கணக்குகளையும் சொத்துக்களையும் ஒன்றிணைப்பது, (ஆ). அட்டை உரிமையாளரின் சொத்துக்கள் மற்றும் உரித்துடைய ஆவணங்களை எவ்விதமான சட்ட ரீதியான முறைகளுக்கும் முகங்கொடுக்காமல், பொது அல்லது தனிப்பட்ட வகையில் விற்பனை செய்து அதனூடாக பெறப்படும் தொகையைக் கொண்டு, யூனியன் வங்கிக்கு மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய தொகையையும் குறித்த விற்பனை

மூலமாக ஏற்படும் செலவீனங்கள் மற்றும் இழப்புகள் ஆகியவற்றை ஈடுசெய்வது மற்றும், (இ). பிரிதொரு நாணயத்திலிருந்து எதிரீடு மேற்கொள்ளப்படுமாயின், குறித்த நாணயத்தை யூனியன் வங்கியினால் அல்லது அதன் துணை நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்படும் நாணய மாற்றுவீதத்துக்கு மாற்றும்.

## 20. பொதுவான அம்சங்கள்

20.1 தனது தொழில் அல்லது இல்ல முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் மாற்றங்கள் ஏற்பட்டால் அது தொடர்பில் அட்டை உரிமையாளர் எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்படும் வரையில், அட்டை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது வழங்கப்பட்ட விவரங்களையே வங்கி பேணும். புதிய விவரங்கள் வழங்கப்பட்டதும், அவை அட்டை விண்ணப்பத்தின் போது வழங்கப்பட்ட விவரங்களுடன் மாற்றீடு செய்யப்படும்.

20.2 வழங்கப்படும் எந்தவொரு அறிவித்தல் அல்லது அட்டை உரிமையாளருடன் பேணப்படும் எந்தவொரு தபால் மூலமான தொடர்புகளையும் அட்டை உரிமையாளர் இறுதியாக வங்கிக்கு வழங்கியிருந்த முகவரியுடன் வங்கி பேணும்.

20.3 வங்கியால் கோரப்படும் போது, அட்டை உரிமையாளர் தமது நிதி நிலைமை தொடர்பான தரவுகளை வங்கிக்கு சமர்ப்பிக்கலாம். அத்துடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை உறுதி செய்வதற்கான அதிகாரத்தையும் வங்கிக்கு அட்டை உரிமையாளர் வழங்குகிறார். கோரப்படும் போது தரவுகள் சமர்ப்பிக்கப்படாவிடின், அட்டை புதுப்பிப்பை இரத்துச்செய்ய அல்லது அட்டையை இரத்துச்செய்யும் தீர்மானத்தை மேற்கொள்ளும்.

20.4 வங்கியினால் அனுப்பப்படும் தபால்கள் திரும்பும்பட்சத்தில் மற்றும் அட்டை உரிமையாளரை தொடர்பு கொள்ள முடியாத நிலை காணப்பட்டால், அட்டையுடன் தொடர்புடைய கட்டணப்பட்டியல் அறிக்கைகள் மற்றும் அல்லது இதர ஆவணங்களை அட்டை உரிமையாளர் வழங்கியிருக்கும் மாற்று முகவரிக்கு அனுப்புவதற்கான அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளது.

20.5 அட்டை உரிமையாளரின் கணக்கில் வங்கி தவறுதலாக வரவு வைத்திருந்தால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த வரவை வங்கியால் மீட்டுக்கொள்ள முடியும் அல்லது அட்டை உரிமையாளரிடமிருந்து அறவிட முடியும்.

20.6 கட்டணப்பட்டியல் அறிக்கையில் நிலுவைத்தொகையை செலுத்துமாறு தொலைபேசியினூடாக வங்கியினால் தொடர்பு கொண்டு அட்டை உரிமையாளருக்கு அறிவித்தல் வழங்கப்படும். அல்லது அழைப்புகளுக்கு பதிலளிக்காவிடின், ஞாபகமூட்டும் தகவல்கள் அழைப்புக்கு பதிலளித்தவருக்கு வழங்கப்படும். அல்லது எஸ்எம்எஸ் அலேர்ட் ஊடாக ஞாபகமூட்டல் வழங்கப்படும். எழுத்து மூலமாக அல்லது வேறு வழிகளில் அட்டை உரிமையாளருக்கு நிலுவைத்தொகையை செலுத்துமாறு ஞாபகமூட்ட வேண்டிய எவ்வித பொறுப்பையும் வங்கி கொண்டிருப்பதில்லை என்பதுடன், இது தொடர்பில் எவ்வித கேள்வியையும் அட்டை உரிமையாளர் கொண்டிருக்க முடியாது.

20.7 அட்டையில் முற்கூட்டி பணம் செலுத்தி அதனை மறைப்பெறுமதியில் பேண முடியாது என்பதை அட்டை உரிமையாளர் அறிந்திருப்பதுடன், அதற்கு உடன்படமாட்டார். இவ்வாறாக பேணப்படும் சந்தர்ப்பத்தில் அதற்காக வங்கியினால் எவ்விதமான வட்டியும் வழங்கப்படாது என்பதற்கும் அட்டை உரிமையாளர் உடன்படுகிறார். ஆனாலும், அவ்வாறான மீதியை அட்டை உரிமையாளரால் பேணியிருந்தால், அதற்கான காரணத்தை வழங்க வேண்டியிருக்கும் என்பதுடன், உடனடியாக குறித்த மேலதிகப்பெறுமதி தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டி எதிர்பார்க்கப்படுவார்.

20.8 அட்டை அங்கத்துவத்தின் மீது லோயல்டி அல்லது வெகுமதித்திட்டங்கள், அல்லது அவ்வாறான ஏதும் அட்டை உரிமையாளருக்கு வழங்கப்பட்டால், அதற்கென பிரிதொரு நியதி மற்றும் நிபந்தனைகள் பேணப்படும்.

20.9 அட்டையை அட்டை உரிமையாளர் உள்நாட்டில் அல்லது வெளிநாடொன்றில் பயன்படுத்தும் போது எக்காரணத்துக்காகவும் அதனை கையகப்படுத்துமாறு குறித்த வர்த்தக நிலையத்துக்கு அறிவித்தல் வழங்கக்கூடிய அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளது.

20.10 சந்தைப்படுத்தல் அல்லது பிரச்சார தகவல்கள் மின்னஞ்சல், தபால் அல்லது எஸ்எம்எஸ் அலேர்ட்கள் ஊடாக அட்டை உரிமையாளருக்கு அனுப்பப்படும்.

20.11 இலங்கை ஜனநாயக குடியரசில் நிலவும் சட்ட விதிமுறைகளின் பிரகாரம், நாட்டில் செயலிலுள்ள நிதிசார் சட்ட நிறுவனங்களின் கோரிக்கைகளின் பிரகாரம், அட்டை உரிமையாளரின் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விவரங்களை அவற்றுக்கு வழங்குவதற்கான ஒழுங்கு விதிமுறையை பின்பற்றும். இவ்வாறு இலங்கையில் காணப்படும் ஒழுங்குவிதிமுறைகளின் பிரகாரம் பரிவர்த்தனை கட்டுப்பாட்டாளருக்கு தகவல்களை வங்கி வழங்குவதற்கு தமது இணக்கத்தை அட்டை உரிமையாளர் வழங்குகிறார்.

20.12 அட்டை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை சட்ட ரீதியான மற்றும் அல்லது செயற்பாட்டு ரீதியான காரணங்களுக்காக குறித்த தரப்புடன் தொடர்பு கொண்டு அவர்களின் பிரத்தியேக விவரங்களை பெற்று உறுதி செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

20.13 வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்களை வங்கி நாட வேண்டிய தேவையை கொண்டிருக்கும் என்பதை அட்டைதாரர் அறிந்திருப்பதுடன், அவ்வாறான நிலைகளில் வாடிக்கையாளர் தரவுகள் இவ்வாறான சேவை வழங்குநர்களுக்கு வெளிப்படுத்தப்பட வேண்டிய இருக்கும் என்பதற்கும் உடன்படுகிறார். இவ்வாறான தரவுகளை இலங்கைக்கு அப்பால் அனுப்ப வேண்டிய சந்தர்ப்பங்கள் இருப்பதையும் வாடிக்கையாளர் அறிந்திருப்பதுடன், இலங்கைக்கு வெளியே அமுலிலுள்ள சட்ட விதிமுறைகளுக்கு உட்படும் என்பதற்கும் உடன்படுகிறார்.

## 21. மீறல் அல்லது முடிவுறுத்தல்

21.1 இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளது அல்லது பரிமாற்று கட்டுப்பாட்டு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன அல்லது ஏதேனும் இதர ஒழுங்குவிதிமுறைகள் மீறப்பட்டுள்ளன என எக்காரணத்தைக்கொண்டும் வங்கி தீர்மானிக்குமாயின், அவ்வாறான நிலையில் அட்டை உரிமையாளருக்கு எவ்வித முன்னறிவித்தல்களுமின்றி அட்டையை வங்கி இரத்துச்செய்யும்.

21.2 அட்டை உரிமையாளரினால் எக்காரணத்தைக்கொண்டும் இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மீறப்பட்டால்,

I. இந்த உடன்படிக்கைக்கு உட்படும் வகையில், குறித்த நடவடிக்கையால் வங்கிக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஏற்படக்கூடிய சகல இழப்புகளையும் அட்டை உரிமையாளர் ஏற்கவேண்டும்.

II. வங்கிக்கு அட்டை உரிமையாளர் செலுத்த வேண்டிய முழு நிலுவைத்தொகையையும் வங்கி செலுத்துமாறு ஆணையிடும் பட்சத்தில் குறித்த ஆணைத்திகதியில் அட்டை உரிமையாளர் அதனை செலுத்த வேண்டும்.

21.3 எந்தவொரு வேளையிலும் அட்டை உரிமையாளர் தமது அட்டை வசதியை இரத்துச்செய்யுமாறு வங்கியிடம் கோர முடியும். இச்சந்தர்ப்பத்தில் எழுத்து மூலமான அறிவித்தலுடன், பிரதான அட்டையும், இதர மேலதிக அட்டையையும் (களையும்) நான்கு துண்டுகளாக வெட்டி சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறாக நான்கு துண்டுகளாக வெட்டி வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத வரையில் குறித்த கோரிக்கை செயற்படுத்தப்படமாட்டாது.

21.4 இந்த உடன்படிக்கை இரத்துச்செய்யும் போது அல்லது அட்டை உரிமையாளர் திவாலாகும் நிலையில் அல்லது உயிரிழக்கும் நிலையில் அட்டை கணக்கில் நிலுவையிலுள்ள முழுத்தொகை மற்றும் அட்டையில் அறவிடப்படாத ஏதேனும் நிலுவையிலுள்ள கட்டணங்கள் ஆகியன முழுமையாக உடனடியாக செலுத்தப்பட வேண்டும். இந்த நிலுவைத்தொகையை வங்கி அறவிடும் போது அட்டை உரிமையாளர் அல்லது அவரின் பிணையாளர் முழுத்தொகை மற்றும் அதனை அறவிட ஏற்படக்கூடிய செலவீனங்கள், கட்டணங்கள் (சட்ட ரீதியான கட்டணங்கள் அடங்கலாக) போன்றவற்றை பொறுப்பேற்க வேண்டும். இந்த தொகை செலுத்தத்தவறும்பட்சத்தில், குறித்த அட்டைக்கணக்கின் மீது நிதிசார் கட்டணங்களை அறவிடுவதற்கான உரிமையை வங்கி தொடர்ச்சியாக கொண்டிருக்கும்.

21.5 யூனியன் வங்கி தனது சொந்த தீர்மானத்தின் அடிப்படையில் அட்டையின் மீது வழங்கப்பட்டிருந்த வெகுமதிகளை தற்காலிகமாக அல்லது நிலையாக மீளப்பெற முடியும். அல்லது முறையான முன்னறிவித்தல் எதுவுமின்றி அட்டையை இரத்துச்செய்யக்கூடிய தீர்மானத்தையும் மேற்கொள்ளக்கூடும்.

21.6 இந்த உடன்படிக்கையின் பிரகாரம் அட்டை கணக்கு இடைநிறுத்தப்பட்டால், அட்டையை பயன்படுத்தும் அட்டை உரிமையாளரின் உரிமை உடனடியாக நீக்கப்படும். அத்துடன், நிலுவையிலுள்ள முழுத்தொகையும் உடனடியாக அட்டை உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டியதாக கருதப்படும், குறித்த தினத்திலிருந்து நிலுவைத்தொகையின் மீது வட்டி அறவீடும் மேற்கொள்ளப்படும்.

## 22. பொறுப்புகளிலிருந்து விடுவித்தல்

பின்வரும் சந்தர்ப்பங்களினூடாக நேரடியாக அல்லது மறைமுகமாக அட்டை உரிமையாளருக்கு ஏற்படக்கூடிய சேதங்களுக்கு வங்கி எந்த வகையிலும் பொறுப்பாளியாகாது:

22.1 விற்பனை நிலையத்தினால் வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளில் காணப்படும் குறைபாடுகள்,

22.2 எந்தவொரு விற்பனை நிலையமும் அல்லது நபரும் அட்டையை ஏற்றுக்கொள்ள மறுப்பது அல்லது நிராகரிப்பது

22.3 எந்தவொரு காரணத்துக்காகவும் கட்டணம் நிராகரிக்கப்படுவது

22.4 கணினி டேர்மினல் அல்லது மற்றும் EDC இயந்திரத்தில் காணப்படும் கோளாறுகள்

22.5 அட்டை உரிமையாளருக்கு பதிலாக பிரிதொரு நபர் கொடுப்பனவு அதிகாரத்தை வழங்குவது

22.6 யூனியன் வங்கியினால் அங்கிகரிக்கப்பட்ட ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு நபருக்கும் அட்டையை அட்டை உரிமையாளர் ஒப்படைப்பது

22.7 அட்டையை மீள ஒப்படைக்குமாறு எந்தவொரு நபரினாலும் மேற்கொள்ளப்படும் அறிக்கை

அல்லது இந்த கோரிக்கைக்கமைய அது தொடர்பில் எந்தவொரு நபரும் மேற்கொண்டிருந்த செயற்பாடுகள்

22.8 அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள காலாவதி திகதிக்கு முன்னதாக வங்கிக்கு காணப்படும் உரிமையின் பிரகாரம் அட்டையை வங்கியில் ஒப்படைக்குமாறு கோரும் சந்தர்ப்பத்தில், அந்த கோரிக்கையை அட்டை உரிமையாளர் மேற்கொண்டிருப்பது அல்லது மற்றும் வங்கியால் அல்லது பிரிதொரு சேவை வழங்குநர் அல்லது வங்கியின் முகவரினால் மேற்கொள்ளப்பட்டிருப்பது.

22.9 வங்கி தனக்கு காணப்படும் உரிமைக்கமைய, அட்டையை அல்லது அட்டைக் கணக்கை நீக்கிக்கொள்வதற்கான செயற்பாடு

22.10 விண்ணப்பதாரி அல்லது அட்டை உரிமையாளருக்கு அட்டையை கொண்டிருப்பதால் அல்லது மற்றும் அதனை மீள ஒப்படைக்குமாறு மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் அல்லது விற்பனை நிலையமொன்றினால் மேற்கொள்ள மறுக்கின்றமை அல்லது மின்னஞ்சல் ஆணை ஊடாக அட்டையை ஏற்க வேண்டாமென கோருகின்றமையால் ஏற்படக்கூடிய அவதூறுகள்.

22.11 யூனியன் வங்கியினால் வழங்கப்படும் தகவல்களில் ஏற்படக்கூடிய தவறுகள், தவறான பிரசன்னங்கள், தவறான அறிக்கையிடல்கள் அல்லது தவிர்ப்புகள்

22.12 யூனியன் வங்கியினால் அல்லது வங்கியின் சார்பாக இயங்கும் எந்தவொரு நபரினாலும் அட்டை உரிமையாளர் செலுத்த வேண்டியுள்ள மொத்த நிலுவைத்தொகையை செலுத்துமாறு ஆணையிடும் சந்தர்ப்பத்தில், அதற்கு அட்டை உரிமையாளர் குறித்த ஆணை தமது நற்பெயருக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் அமைந்துவிடக்கூடாது எனக்கோருவது.

22.13 மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர் அல்லது ஒப்பந்தக்காரர் மூலமாக வழங்கப்படும் தொடர்பாடல்கள் மற்றும் ஏற்பாடுகள் போன்றவற்றுக்கு வங்கியினால் அல்லது குறித்த மூன்றாம் தரப்பினரால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு பயன்படுத்தப்படும் சகல சேவைகளுக்குமான செலவை அட்டை உரிமையாளர் ஏற்க வேண்டும். முயற்சி அடிப்படையில் உதவிகள் வழங்கப்படும் என்பதுடன், காலம், தூரம் அல்லது அமைவிடம் ஆகியவற்றை பொறுத்து இது கிடைக்காமல் போகக்கூடும். மூன்றாம் தரப்பு சேவை வழங்குநர்களால் பரிந்துரைக்கப்படும் அல்லது மற்றும் நியமிக்கப்படும் காப்புறுதி, மருத்துவ அல்லது மற்றும் சட்ட ரீதியான நிபுணர்கள் குறித்த சேவை வழங்குநர்களின் ஊழியர்களாக இருக்கமாட்டார்கள் அல்லது குறித்த சேவை வழங்குநர்களின் ஒப்பந்தக்காரரின் ஊழியர்களாகவும் இருக்கமாட்டார்கள். எனவே, குறித்த காப்புறுதி, மருத்துவ, சட்ட அல்லது இதர எந்தவொரு சேவையின் கிடைப்பனவு, பாவனை, சட்டங்கள், தவிர்ப்புகள் அல்லது அதனூடான பெறுபேறுகள் போன்றவற்றுக்கு அவர்கள் பொறுப்பாகமாட்டார்கள். மேற்குறிப்பிட்ட தரப்பினரால் வழங்கப்படும் சேவைகள் அல்லது ஏற்பாடுகள் போன்ற எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் வங்கி எச்சந்தர்ப்பத்திலும் பொறுப்பேற்கமாட்டாது.

## 23. வெளிப்படுத்தல்கள்

இந்த 23ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள விடயங்களுக்கமைய, சகல கொடுக்கல் வாங்கல்கள் அல்லது அட்டை உரிமையாளருடனான தொடர்பாடல்கள் தொடர்பான இரகசியத்தன்மையையும் வங்கி பேணும் என்பதுடன், சட்ட விதிமுறையின் பிரகாரம் அவசியமாயின், அட்டை உரிமையாளர் அல்லது மற்றும் அட்டை கணக்கு தொடர்பான தகவல்களை வழங்க வங்கிக்கு அட்டை உரிமையாளர் அதிகாரம் வழங்குகிறார். அச்சந்தர்ப்பங்களாவன,

23.1 எந்தவொரு வங்கி அல்லது நிதிசார் நிறவனம் அல்லது கொடு கடன் தகவல் பணியகம் அல்லது கடன் தகவல் பணியகத்தை நிர்வகிக்கும் அல்லது கட்டணம் செலுத்தாத வாடிக்கையாளர் விவரங்களை பொது சேவை வழங்குநர்

23.2 அட்டை உடன்படிக்கையின் பிரகாரம் வங்கியினால் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட பிரேரிக்கப்பட்ட நபர் அல்லது பங்குபற்றுனர் அல்லது உப பங்குபற்றுநர் அல்லது வங்கியின் உரிமையை பெற்றவர்

23.3 வங்கியின் அல்லது தொடர்புடைய நிறுவனத்தின் நம்பிக்கைக்கமைய இயங்கும் எந்தவொரு முகவர், ஒப்பந்தக்காரர் அல்லது சேவை வழங்குநர்

23.4 ஏதேனும் மேற்பார்வை அல்லது ஒழுங்குபடுத்தல் அதிகார அமைப்பு

23.5 இலங்கையில் அமுலிலுள்ள சட்ட விதிமுறைகளுக்கமைய இயங்க பணிக்கப்பட்டவர்கள்

23.6 வங்கியுடன் வணிக பாவனைக்காக தொடர்பை கொண்டுள்ள எந்தவொரு அலுவலகம் அல்லது அதன் கிளை, மற்றும்

23.7 வீசா இன்டர்நஷனல் இன்கோர்பரேட்டட் அல்லது அதனுடன் தொடர்புடைய எந்தவொரு நிறுவனம் அல்லது வீசா இன்டர்நஷனல் இன்கோர்பரேட்டட் பணிப்புரையில் இயங்கும் எந்தவொரு நபர்

## 24. சட்ட மற்றும் விதிமுறை

இந்த உடன்படிக்கை இலங்கையின் சட்ட விதிமுறைகளுக்கமைய அமைந்துள்ளதுடன், இது தொடர்பில் இலங்கையின் நீதிமன்றத்தில் பொருத்தமான நீதி கோரிக்கையை மேற்கொள்ள முடியும். இருந்த போதிலும், கடன் தொகையை மீள செலுத்தக்கோரி வெளிநாடொன்றில் கோரிக்கையை மேற்கொள்ளும் அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளதுடன், வேறெந்தவொரு நாட்டிலும் காணப்படும் சட்ட விதிமுறையை பின்பற்றுவதற்கான அதிகாரத்தையும் வங்கி கொண்டுள்ளது. மேலும், சட்டம், அரசாங்க விதிமுறைகள் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அல்லது ஏதேனும் இதர சட்டபூர்வமான அமைப்பொன்றினால் ஏதேனும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படும் பட்சத்தில் இந்த நிபந்தனைகளில் சுயமாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்.